Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 323
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 17 ரம்ழான் 29 திங்கட்கிழமை (1-1-68)

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.
போன்: 7233

# வடபகுதிபடித்தவாலிபருக்கு இவ்வருடத்தில்வேலை வாய்ப்பு

## மூன்று திட்டங்களில் ஆயிரம் பேருக்கு வேலை

— நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

யாழ்ப்பாணம், திங்கள்

**வடமாகாணத்தில் வேலையில்லாதிருக்கும் நூற்றுக்கணக்கான படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு அதிர்ஷ்டம் இப் புதிய வருடத்தில் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி இவ்வாண்டுக்குள் ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை கிடைக் ம்.**

இத் தகவல்களை வடமாகாண தொழில்கந்தோர் அதிகாரி திரு. ஜி. டி. ராஜா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வடபகுதியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்கள், குடியேற்றத் திட்டம், விவசாயப்படை ஆகிய மூன்று திட்டங்களின் மூலம் இளைஞர்களுக்கு இவ் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

வடமாகாண தொழிற் கந்தோரில் நூற்றுக்கணக்கான வேலையற்றிருக்கும் இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காகத் தம்மைப் பதிவு செய்துள்ளார்கள். இவர்களில் பலருக்கு இவ் வருடம் முன்னைய வருடங்களைவிட கூடுதலான வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

வடமாகாணத்தில் சில வருடங்களுள் ஆரம்பிக்கப்பட்ட நுண் தொழில் நுட்பக்கல்லூரியில் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வேலையில்லாதிருக்கிறார்கள். இவர்களுக்கு வடமாகாணத்தில் பல்வேறுதுறைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

கொழும்புத்துறை மர வேலைப் பயிற்சி நிலையம், சுண்டிக்குளி டிராக்டர் பயிற்சி நிலையம், கட்டடப் பயிற்சி நிலையம், பரந்தன் டிராக்டர் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற, பயிற்சிபெறும் இளைஞர்களுக்கு விவசாயத் துறையில் வேலைவாய்ப்பளிப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

விசுவமடு போன்ற குடியேற்றத் திட்டங்களிலும் இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் குடியேற்றப்படவிருக்கிறார்கள்.

விவசாயப்படையிலும் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் சேர்க்கப்படுவார்கள் விவசாயத்துறையில் வடமாகாணத்திலுள்ள வேலையில்லாதிருக்கும் படித்த இளைஞர்களை ஈடுபடுத்தி அவர்கள் எதிர்கால வாழ்வுக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஏற்ற நல்ல பல திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

## நமது வாழ்த்து

வாசக நேயர்களுக்கு 'ஈழநாடு' தனது உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## பூகம்பஇடத்துக்கு இந்திரா விஜயம்

பம்பாய், டிச. 31

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அண்மையில் கடும் பூகம்பம் ஏற்பட்ட இடங்களான கொய்னநகர், மற்றும் பிரதேசங்களைப் பார்வையிட்டார்.

பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண வேலைகள், போதிய பணமின்மைகாரணத்தால்பாதிக்கப்படுவதைத் தாம் அனுமதிக்கமாட்டார் என அவர் அங்குள்ள தலைவர்களிடம் உறுதியளித்துள்ளாரெனக் கூறப்படுகிறது.

கல்வி மந்திரி திரு. திரிகுணசென், பூகப்பத்தினால் வீடிழந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு நிதி திரட்டியுதவுமாறு கல்விநிலையங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஸ்தலஸ்தாபனஊழியர் புதுவித போராட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க வடபிரதேசக் கிளை உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளைப்பெறுவதற்காகஅமைதியான முறையில் புதியரக போராட்டம் நடத்தத் தீர்மானித்திருப்பதாக சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரதிநிதி திரு வி. எம். பழனி அறிவிக்கிறார்.

தங்கள் சங்க ஊழியர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஸ்தலஸ்தாபன அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்தும் பயன் கிடைக்காமற் போனதால் அமைதியான முறையில் போராட்டம் நடத்தி தமது குறைகளுக்குத் தீர்வுகாணத் தீர்மானித்திருக்கிறார்களாம்.

வேலைநிறுத்தம் செய்து பொதுமக்களுக்கு இன்னல் விளைவிக்க தாங்கள் விரும்பவில்லையென்றும் இம்மாதம் 15-ந் திகதி தொடக்கம் 17-ந் திகதிவரை பருத்தித்

[4-ம் பக்கம் பார்க்க]

## "தமிழர் கலையில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது"

### உதவி அரசாங்க அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

"கடந்த 500 நூற்றாண்டுகளுக்குமேலாகத் தமிழர்கள் கலைத்தன்மையையும் சிறப்பையும் உணராதவகையில் மயங்கிக்கிடந்தனர். இந்த நிலை இன்று மாறுத ...ந்து பல்வேறுபட்ட ...லும் புதுப்புது கலை ...க்குலுங்குவதைக் ...ரும். இந்த கலை ...லர்ச்சி குறிப்பி ...டத்தில் மாத்தி ...வலாக எங்கும் ...து"

...ாழ். மாவட்ட ...ாங்க அதிபர் ...கேசம்பிள்ளை ...தினம் மாலை ... குருநகரி ...ன் எட்டாவது ஆண்டுவிழாவின் மூன்றாவது தின நிகழ்ச்சியான பரிசளிப்பு விழாவின்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழர்களது கலைகள் அறுபத்துநான்கு என்று ஒரு படல் குறிப்பிட்டுள்ளது. கலைகளினூடேயுள்ள உட்பொருளை உற்றுணர்ந்து செம்மையானவாழ்க்கையை மக்கள் மேற்கொண்டனர். அந்த வாழ்க்கையின்பேறாக அவர்கம் அறிவுப்பண்பு உயர்ந்திருந்தது. இத்தகைய உணர்ச்சி இன்று அரும்பியிருப்பது மக்கள் வாழ்வினை செப்பப்படுத்த உதவுவதாக அமையும்.

'ஈழநாடு' பஞ்சாங்கம்

1968-ம் ஆண்டுக்கான 'ஈழநாடு' பஞ்சாங்கம் இன்றைய 'ஈழநாடு' பத்திரிகையுடன் இணைக்கப்

எல்லோருக்கும் எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!




உஷா நீல சோப்

ஓர் மெச்சத்தக்க உள்ளூர் உற்பத்தி
சோப்புகளில் சிறந்தது!

நீலமின்றி நிகரற்ற வெண்மையை அளிப்பது
உஷா நீல சோப் ஒன்றே

தயாரிப்பாளர்கள்:
பிரபாத் இன்டஸ்றீஸ்,
72, ஸோண்டர்ஸ் பிளேஸ், கொழும்பு-12

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
ஐ. சின்னத்துரை அன் சன்ஸ்,
13, பஜார் லேன், யாழ்ப்பாணம்.
போன்: 7157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்கு கடிதங்கள்

## தமிழாராய்ச்சி மகாநாடு கவனிக்கவேண்டும்

கடல் கடந்த நாடுகளி லுள்ள தமிழர் கலாச்சார தேவைகளை ஓரளவு நிறை வேற்ற உதவும் பணியில், வெளி நாடுகளிலுள்ள தமிழ் மக்களுடன் பேணு நட்பு வளர தொடர்புகளை ஏற்ப டுத்திக் கொடுக்கும் பணியி லும் ஈடுபட்டிருக்கிற நான், எனது அனுபவத்தில் அறிந் தவைகளை தங்களின்மேலான கவனத்திற்கு கொண்டு வரு வதில் பூரிப்படைகிறேன். சென்னையில் விரைவில் கூட விருக்கும் உலக தமிழ்மகா நாட்டின் மூலம், இதனை நிறைவேற்ற தங்கள் முழு முயற்சிமேற்கொள்ள தமிழ் மக்களின் சார்பாக வேண் டுகிறேன்.

1) கலாச்சார உறவுக் கான இந்திய கவுன்சிலில் என்ற ஒரு நிறுவனம் நம் நாட்டில் ஏற்கனவே இருந்து வந்த போதிலும், இதன் மூலம் கடல் கடந்த நாடு களில் உள்ள தமிழர்களுக்கு இவை பயனுடையதாக இல்லை. பிரெஞ்சு கலாச்சா ரத்தைப் பரப்ப 'பிரெஞ்சுக் கழகம்', பிரிட்டிஷ் கலாச் சாரத்தைப் பரப்ப 'பிரிட் டிஷ் கவுன்சில்' ஜெர்மன், கலாச்சாரத்தை பரப்ப 'கதே கழகம்' [இது நாட் டில் மாக்ஸ் முல்லர் பவன் என அழைக்கப்படுகிறது] ஆகியவை வெளி நாடுகளில் இயங்குவதுபோல் தமிழர் கலாச்சாரத்தைப் பரப்ப "தமிழ் கவுன்சில் ஒன்றினை துவக்குவது அவசியமான தாகவே நான் கருதுகிறேன். இதன் மூலம் தென் ஆபி ரிக்கா, பர்மா, மலேஷியா, பிஜி, இலங்கை, சுமத்திரா, ஜாவா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளிலுள்ள லட்சோப லட்சம் தமிழ் மக்களின் கலாச்சாரத் தேவைகளை நிறைவேற்ற முடியும்.

2) திருவாசகமணி, கே. எம். பாலசுப்பிரமணியம் டாக்டர், வே. ராகவன், பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி, திருவாளர்கள் கிருபானந்தவாரியார், ஸ்ரீ தாரி பிரசாத், குன்றக்குடி அடிகளார், கி. வா. ஜகந் நாதன் போன்ற தமிழ் அறிஞர்கள் தமிழ் வழங்கும் பகுதிகளுக்குச் சென்று உரை நிகழ்த்தவும், ஏனைய வெளி நாடுகளுக்குச் சென்று தமி ழர் கலாச்சாரம் குறித்து உரை நிகழ்த்தவும் வழி வகுக்க வேண்டும்.

3] தமிழ்த் திரைப்படங் கள், தமிழ் சஞ்சிகைகள் ஆகியவைகள் தமிழ் வழங் கும் பகுதிகள் எங்கும்தாரா ளமாக செல்வதைக் காண வேண்டும், தமிழ்த் திரைப் பட நாடகக் கலைஞர்களைக் கொண்ட நல்லெண்ணத் தூதுக்குழுவை உறவை வளர் க்கும்முறையில் பிறநாடுக ளுக்கு அனுப்பி வைத்தல் அவசியமாகும்.

4) தமிழகஅரசு இப்பொ ழுது ஆண்டு தோறும் இரு மலேஷிய மாணவர்களுக்கு மட்டிலுமே உபகாரச் சம்ப ளம் வழங்க முன் வந்துள் ளது. இச்சலுகையை மற்ற நாடுகளிலுள்ள தமிழ்சமூக த்தை சேர்ந்த மாணவர்க ளுக்கும் விஸ்தரித்தல் வேண் டும்.

5) திருக்குறளின் இலக் கிய நயத்தில் மட்டுமே நாம் இதுவரை நாட்டம் செலுத் தியதாலேயே குறள் நெறி உலகெங்கும் பரவ முடியா மற் போய்விட்டது. குறள் நெறியை பிற மொழியினரி டையே பரப்பும்முயற்சியை மேற் கொள்ள வேண்டும். இதனை செய்யத் தவறியதா லேயே ப்ளாட்டோ, அரிஸ் ட்டாடில், கார்ல்மார்க்ஸ், புத்தர், குன்பூசியஸ், யேசு, நபிநாயகம் போன்ற போரு மக்களின் வாக்குகள் உலகெ ங்கும் பரவியது போல் வள் ளுவர் தமிழ் எல்லைக்கு அப் பால் உரிய முறையில் இது வரை அறிமுகமாகவில்லை. இக்குறையினை போக்க முன் வருதல் வேண்டும்.

கே. பாலசுந்தரம்.
சென்னை

ஃ ஃ

## மராமத்து இலாகா கவனிக்குமா?

இன்று நமது முன்னேற் றம் வாலபேத்தை போன்று தான் வளர்ச்சியடைகிறது. இன்று மக்களின் இன்றி யமையாத தேவையாக போக்குவரத்துச் சாதனங் கள் அமைந்துவிட்டன. பெரும் உருப்படியான இரட்டைத்தட்டு பஸ்கள் லெயிடன் பஸ்கள், லொறி கள் டிராக்டர்கள் எல்லாம் வீதிகளில் ஓடுகின்றன. இந்த போக்குவரத்துச் சாத னங்களிற்கேற்ப மராமத்து இலாகாவினர் வீதிகளைச் செப்பனிட்டுள்ளார்களா என்றால் இல்லை. இன்று யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள வீதிகளில் இரண்டு பஸ்கள் விலகிச்செல்வ தற்கு நமது வீதிகள் இடங் கொடுக்க மறுக்கின்றன. அவ் வீதிகளும் குண்டும் குழியுமாக இருக்கின்றன. பொதுமராமத்து இலாகா வினர்இக் குறையினை கவ னித்து வீதிகளைச் செப்ப னிட்டு பொதுமக்களின் இன்றியமையாத தேவையி னைப் பூர்த்திசெய்வார்களா?

ராஜி
யாழ்ப்பாணம்.

ஃ ஃ

## பரீட்சையை மாற்றவும்

கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை, கல் விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை, வகுப்பேற் றப் பரீட்சைகள் ஆகியவற் றைக் கல்வி இலாகாவினர் மாரி காலத்தில் அதுவும் கடும் மழைபொழியும் மார் கழி மாதத்தில் தற்பொழுது நடாத்திவருகின்றனர். இக் காலத்தில் இயற்கையாக ஏற்படும் நுளம்புக்கடி, பெரு வெள்ளம், போக்கு வரத்துத்தடை போன்ற பல வற்றினுல் மாணவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இதனை கல்வி இலாகாவினரும் அர சாங்கமும் கவனித்து இப் பரீட்சைகள் அனைத்தையும் கோடைகாலத்தில் வைத்து சிங்கள-தமிழ் புத்தாண்டா கிய சித்திரைத் திங்களில் புது வகுப்பிற்குச் செல்ல வழி செய்வார்களா!

தேன்மொழி,
யாழ்ப்பாணம்.


எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்களுக்குத் தேவையான
எல்லாவிதமான ஜவுளி வகைகளையும்
பெற்று
சென்ற வருடங்களைப்போல் இந்த வருடமும்
ஆதரவு தருக!

கணேசானந்தாஸ்

(முட்டாசுக்கடைச் சந்தி)
208, காங்கேசன்துறைவீதி — யாழ்ப்பாணம்.


# ஆஸ்பத்திரி அவசியம்

அனலைதீவில் சென்ற சில மாதங்களின் முன்னர் ஓர் இளைஞர் [வயது 27] கிருமி நாசினி அடித்துக்கொண் டிருந்தபோது மயக்கமுற்ற நிலையில் அங்குள்ள அப் போதிக்கரியிடம் காட்டிய பொழுது தன்னுல் இயன்ற முறை பாடுபட்டு முடியாத தருணத்தில் ஊர்காவற் துறைக்கு கொண்டுசெல் லும்படி ஆலோசனை தெரி வித்தார். அப்போது லோஞ்சிப்பந்திகளைத் தேடியலைந்து கூட்டிச் சென்று ஊர்காவற் றுறையை அடைந்த பொழுது இளைஞர் கால மாஞர். அவரைப் பார்த்த டாக்டர் சற்று முன் கொண்டு வந்திருந்தால் முயற்சித்திருக்கலாமென் ருர்.

சென்றகிழமை புயல் பயத்திஞலும் மழையிஞ லும் மூன்று நாட்கள் யந் திரப் படகுச்சேவை நிறுத் தப்பட்டிருந்தது. அப் பொழுது பல பிரசவத் தாய்மார்கள், கடும் வருத் தக்காரர்கள் கஷ்டமுற் ருர்கள். தீவுகளல்லா மற்ற இடங்களிலாவது நோயாளி களைத் தூக்கிவந்துவிடலாம். ஆஞல் இங்கு ஒன்றுமே செய்யமுடியாது, இப்படி யான இடத்துக்கு ஆஸ் பத்திரி மிகமிக முக்கிய மென்பதை அரசினர் கிரா மச்சங்கத்தினர், முற் போக்கு இயக்கங்கள மறந்துவிட்டார்களா?

அரசினர் இதுவிஷயத்தில் அதிக அக்கறை காட்டி ஓர் ஆஸ்பத்திரி கட்டித்தரு வார்களா?

ரஞ்சனி நடராசன்
ஜென்னடி ஒழுங்கை,
அனலைதீவு.

ஃ ஃ

## பஸ் சேவை சீர்கேடு

யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கு வீதி வழியாக ஊர் காவற்றுறைக்குச் செல்லும் பஸ்கள் தவிர மற்றைய வழிகளால் ஊர்காவற் றுறையை அடையும் பஸ் சேவை நாளுக்கு நாள் சீர் கேடடைந்து வருவதால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமுற வேண்டியேற்படு கிறது.

சில தினங்களுக்கு முன்பு காலை 6-30 மணி தொடக் கம் 8-15 மணிவரையும் பஸ்ஸிற்காக காத்து நிற்க வேண்டியநிலையேற்பட்டது. அன்றைய தினம் பகல் இரண்டு மணி தொடக்கம் பஸ்ஸிற்காகக் காத்து நின்று முடிவில் நாங்கள் அராலி மட்டும் நடந்து குறிகாட்டு வானில் இருந்து வந்த பஸ் மூலம் மாலை 6-00 மணிக்கு யாழ்ப்பாணத்தை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

வேலணை — ஊர்காவற் றுறைகுறுகியபஸ்சேவைஇல் லாததால் நேயாளிகள் சுரு வில் ஊடாக ஊர்காவற்று றையை அடைந்து அங்கு இருந்து மேலதிக பணம் கொடுத்து ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டியிருப்பது டன் வீண் காலதாமதமும் ஏற்படுகிறது. இதைக் கருத் தில் கொண்டு சம்பந்தப் பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேம்.

வி. இ. சிந்தனைச்செல்வன்
வி. செல்வராசா
வி. யேசுராசா
ஞா. ராசதுரை
நாரந்தனை.

# 'எங்களுக்கு வேலை தரட்டும்'

சங்கானை, ஞாயிறு

நாட்டிலே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் பொருளாதா ரத்தை மேலும் சீர்குலைக் கும் சதி முயற்சிகளை வன் மையாகக் கண்டிப்பதோடு வேலையற்றிருக்கும் வாலிபர் களாகிய நாம், குறைந்த அளவு சம்பளத்திலேயே வேலைநிறுத்தக் காலத்தில் அரசாங்கத்திற்கு கைகொடு த்துதவுவதென தெரிவித் துக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை சங்கானை சனசமூக நிலையத்தினர் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளனர்.

'நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்திஞல் பாதிக் கப்பட்ட ஏராளமான படி த்த வாலிபர்கள் ஏழ்மை யில் வாடுகின்றனர். வேலை நிறுத்தம் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதார த்தை மேலும் பின்தள்ளி எம்மை மேலும் வேதனைக் குள்ளாக்கிருர்கள். ஆகவே வேலைநிறுத்தம்செய்வோரை அரசாங்கம் நீக்கிவிட்டு எம்மை வேலைகட்கு நியமிக் கட்டும். குறைந்த அளவு காலப் பயிற்சியோடு நிறை ந்த அளவு சேவையைச் செய்து நாட்டிற்கு விசுவா சமாகநடப்போம் என்பதை அரசாங்கத்திற்குத் தெரி விக்க விரும்புகிறேம்' என்று மேலும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.'

## வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிந்ததாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

குருநகர் றெக்ள மேசனைச் சேர்ந்த ராசத்தம்பி என்ப வர் கத்திக்குத்துக் காயங் களுடன் யாழ்ப்பாணம்பெரி யாஸ்பத்திரியில் அனுமதிக கப்பட்டுள்ளார்.

ஒரு மரணச் சடங்கிற்கு செலவு செய்த பணம் சம் பந்தமாக சிலருடன் வாக்கு வாதம் ஏற்பட்டதாகவும் இதஞல் தான் ராசத்தம்பி கத்திக்குத்துக்காளாஞரென் றும் தெரியவருகிறது. இது சம்பந்தமாக கரையூர் பொலிஸ் நிலையத்தைச் சேர் ந்த திரு ரட்ஞயக்கா விசா ரணை நடத்திஞர்.

சந்தேக நபர்கள் தலை மறைவாகிவிட்டதாகத் தெரியவருகிறது. (வி. நி.)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

லொறி

33 ஸ்ரீ மொடல் லோட் மாஸ்ரர் லொறி நல்ல நிலை யில் விற்பனைக்குண்டு. கீழ்க் கண்டவிலாசத்தில் பார்வை யிடலாம். வி. தம்பையா, கொன்ருக்டர், வட்டுக் கோட்டை மேற்கு. 2016

காணி

சாவகச்சேரி பெண்கள் கல்லூரிக்கு அருகாமையில் வீடு கட்ட, நிறம் காணி 6 பரப்பு தனித்தோ, பிரி வாகவோ விற்கப்படும். உடனே தொடர்புகொள்க: இ. இராசதுரை, 'சக்தி', தபாற்கந்தோர் வீதி, சாவ கச்சேரி. 2010

## தேவை

ஆள்:

மன்ஞர் மாவட்டத்தில் நூறுஏக்கர் முந்திரிகைக் கமத்தில் வேலை பழகியபின் கமத்தின் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகுதியும் கமத்தொழில் ஊக்கமும் கடினமான வேலை செய்யக்கூடிய தேகநிலைமை யும் உள்ளவர்கள் தேவை முதல் ஆறுமாதமும் உண வும் இருப்பிட வசதியும் அதன்பின் வேலைக்கேற் சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். கா. கணேசரத்தினம், 5. W. A, சில்வா மாவத்தை, வெள்ள வத்தை. 2536

## கல்வி

பரீட்சை

மாணவ ஆசிரிய பரீட்சை 1968 விண்ணப்பப் படிவங் களுக்கு 5 பத்துச் சத முத் திரையுடன் விண்ணப்பிக்க வும். வகுப்புக்களும் நடாத் தப்படும். வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 2021

## நோயாளர்கள் அவதி

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் பாஞவெட்டி அரசினர் வைத்தியசாலை யில் மருந்து வாங்கும் நோயாளர்கள், அங்கு கடமையாற்றும் அப்போ திக்கரி சுகயீனமாக இருப்ப தால் மருந்து பெற்றுக் கொள்ளமுடியாமல் வீடு செல்கின்றனர்.

# 10 ஆண்டுகள்

1968 பெப்ரவரி மாதம் 11-ந் திகதி 'ஈழ நாடு' பத்திரிகைக்கு பத்து வயது தொடங்கு கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பத்திரிகை அதுவும் தினசரிப்பத்திரிகை பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவருவதென்பது சாதா ரண விஷயமல்ல. மகத்தான சாதனையென்று சொல்லலாம்.

'ஈழநாடு' பத்தாவது வயதில் காலடி எடுத்து வைக்கிறது என்ற செய்தி நமது வாசக நேயர்களுக்கு மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் அக மகிழ்வை அளிக்கும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் 'ஈழநாடு' ஆற்றியுள்ள பணிகள் பல. தமிழ்பேசும் மக் களின் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பெற்றிருக்கிறது.

நமது சேவையைப்பற்றி நாமே எடுத்துச் சொல்லுவது நல்லதல்ல. இந்தப்பொறுப்பை வாசகநேயர்களாகிய உங்களிடமே ஒப்ப டைக்கிறேம். நீங்களும் இதை மகிழ்ச்சி யுடன் ஏற்றுக் கொள்வீர்களென்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு

'ஈழநாடு' கடந்த காலத்தில் ஆ[illegible] பணிகள்பற்றியும் அது இனி என்ன [illegible] வேண்டுமென்பதுபற்றியும் உங்கள் [illegible] எழுதுங்கள்.

விரைவில் நாங்கள் வெளியி[illegible] 'ஈழநாடு' பத்தாவதாண்டு மலரி[illegible] கருத்தும் இடம்பெறும் என்பதை[illegible] சியுடன் தெரிவித்துக் கொள்கிறே[illegible]

எனவே 'ஈழநாடு'பற்றி உங்க[illegible] உள்ளம் திறந்து எழுதுங்கள்; [illegible] துங்கள்.

த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபத்தெட்டே வருக!

“வன்னியூர்க் கவிராயர்”

மங்களமோங் கச்சுபிட்சம் வாழ அறிவு - அன்பு
எங்கணுமி ணைந்தொற்று மைவளர -
இங்கிதஞ்சேர்
ஆயிரத்துத் தொள்ளா யிரத்தறுபத் தெட்டே நீ
வாய்மையுடன் காட்டு வழி!

ஃ

நானிந்த நாட்டவனென் நாடீழ நாடென்ற
தேனினிய தேசபக்தி தான்செழித்து -
மானிடர்கள்
வாழ...மற்ருே ரைவாழ வைத்திடப்புத்
தாண்டன்பு
சூழ்ந்த நண்பனுய்ச்செய் துணை!

# மலர்க புத்தாண்டே

இ—நாகராஜன்

கோவில் மணியொலிக்க
கூடுமிருள் போயகல
சேவ சிறகடித்துச்
செந்தமிழிற் பாட்டிசைக்க
காவிற் கலைமலர்கள்
கண்விழித்துக் கோலமிட
பூவிற் புதுமையுடன்
பூத்தொளிரும் புத்தாண்டே.

ஃ

வாழி வணக்கமிந்த
வையம் சிறந்தொளிரச்
சூழும் துயர் போக்கி
தூயபரன் நாமத்தை
ஆளப் படைத்தன்பின்
ஆக்கம் உயர்வுதர
நாளும் துணையாகி
நற்ருண்டே செய்வாய் நீ!

ஃ

நேற்றைப் பொழுது
நீங்கிற்று, நீளுலகில்
ஏற்றம் பிறந்ததென்ற
எண்ணம் மனிதவுளம்
ஊற்ருய் பெருகிநிதம்
உண்மையுடன் காலத்தின்
மாற்றம் வரன்முறையில்
மலர அருளீவாய்!

ஃ

தோற்றும் பொருள்யாவும்
துலங்கி ஒருநாளில்
மாற்றம் அடைந்துமறை
வுற்றே அழிந்தாலும்
ஏற்றம் இறைவனருள்
என்றுமனம் கொண்டிடவே
சாற்றிச் சமத்துவத்தை
தாங்கிடவே வாராய்நீ!

ஃ

ஒன்றே குலமென்றும்
உண்மை உயர்வென்றும்
நன்ருய் ஒருகொள்கை
நாட்டில் நலம்பெருக்கிச்
சென்ற பழமையிலும்
சேர்ந்த சிறப்புகளை
ஒன்றி உயர்வடைய
ஓங்கி மலருக நீ!

சென்னையில் இன்று சிலை எடுக்கும் வைபவம்

# நாவலர் சிலை; நாம் செய்த தவறை நிவர்த்தி செய்வோம்

— முதலியார் செ. முத்துத்தம்பி —

சென்னையில் 3-ம் தேதி ஆரம்பமாகும் 2-வது உலக தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி சென்னையில் பல்வேறு துறைகளில் உலகத்தில் பணியாற்றிய, பணியாற்றும் பெரியார்களைக் கௌரவிக்குமுகமாக சிலை எடுக்கும் வைபவம் இன்று நடைபெறுகிறது. திருவள்ளுவர், ஔவையார், கவியரசர் கம்பர்' புலவர் ஜீ. யு போப், ஆங்கிலப்புலவர் கால்வெல், மகாகவி பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரப்பிள்ளை, வீரமாமுனிவர், கண்ணகி ஆகியோர்களுடன் தமிழகமுதல் அமைச்சர் அறிஞர் அண்ணுதுரைக்கும் இன்று சிலை எடுக்கப்படுகிறது. இப்படியான ஒரு நல்ல காரியத்தை வரவேற்காதவர்கள் யாருமே இருக்கமுடியாது.

ஆனுல்—

தமிழுக்கும்சைவத்துக்கும் இதுவரைஎவருமே ஆற்ருத அளற்பரிய தொண்டாற்றிய நாவலர் பெருமானுக்கு இன்று சிலை எடுக்கப்படவில்லையென்பதை எண்ணும்போது தமிழ்கூறும் நல்லுலகம் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. இப்படியானதொரு செயல் வேதனையையும் அளிப்பதாகவுள்ளது.

நாவலர் பிறந்தகமான ஈழத்திலிருந்துமட்டும்தனது சேவையைச் செய்யவில்லை. அதற்கு அப்பாலும் சென்று இந்தியாவிலும் தனது தொண்டைத் தொடர்ந்தார்.

நாவலர் பெருமான் ஓர் அவதார புருஷர். தமிழுக்கும்சைவத்திற்கும்தொண்டு செய்வதற்கென்றே பிறந்தவர். ஶ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை பெரும்புலவர். பெரும்பண்டிதர், தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றிலும் பாண்டித்தியம் பெற்றவர், பேராசிரியர்' பதிப்பாசிரியர் நாவலர் பெருமான் வாழ்ந்த காலத்தில் பிறந்தவர். நாவலர் பெருமான்சிவபதமடைந்தாரென்று கேள்வியுற்றபொழுது அவருள்ளத்திலெழுந்த வெண்பா,

“நல்லைநகராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே — எல்லவரும்
ஏத்து புராணுகமங்க ளெங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறிவெங்கே யறை’

நாவலர்பெருமான் உரைநடை வேந்தர், உலகத்துப் பேச்சாளரில் தலை சிறந்தவர். நூலாசிரியர், பதிப்பாசிரியர், இணையற்றவர்.

உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நாவலர்பெருமானுக்கு ஒரு சிலை நாட்டாதது பெருந்தவருேயாம், பெரும் பிழையேயாம், அந்தத்தவறை, அந்தப் பிழையை நிவர்த்திசெய்து அவர் வாழ்ந்து சேவையாற்றிய சென்னையிலும் சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் சிலைகள் நாட்டிப் பெருவிழா கொண்டாடுவதேயாம்.

உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு. நாவலர்பெருமான் விஷயத்தில் பெருந் தவறு செய்தாலும், அதுசெய்து வரும் அரியபெரியதொண்டுகளை யார்தான் மறுக்க முடியும். எங்கள் தமிழ் மிகப் புராதன மொழி—லத்தீன், கிறீக் ஈபுறு. சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலும் முந்தியது, அந்த மொழிகள் இறந்து [illegible] போயின, ஆனுல் எங்கள் தெய்வத் தமிழ், கன்னித் தமிழ், தேன் தமிழ் தனது எழில்நலம் குன்ருது வளர் பிறைபோல வளர்ந்து வருகிறது. உலகத்திலுள்ள இலக்கண நூல்களில் தொல்காப்பியமே ஆகப்பழையது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தினதாக சொல்வார்கள் இதில் அதற்கு முந்திய இலக்கண நூல்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது.

இலக்கியத்திற்குத் தானே இலக்கணம். தமிழிலக்கியம்எத்தனையாயிரமாண்டுகள் வளர்ந்துவந்திருக்க வேண்டுமென்று யூகித்தறியவேண்டியது—

வளர்ச்சியும் தளர்ச்சியும் இயற்கைதானே. நாவலர் பெருமான் காலத்திலே தமிழ்மொழி மெத்ததளர்ச்சியுற்றிருந்தது. “நாவலர் பிறந்திரேல் சொல்லு தமிழெங்கே” யென்று இன்னுமொருதரம் அவர் பிறந்த யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு திருவுருவச்சிலைநாட்டவில்லை. சென்னையிலும், சிதம்பரத்திலும் நீண்ட காலமிருந்து தொண்டாற்றினுர்கள். அவர்களும் பெருமானுக்கு சிலைநாட்டத் தவறிவிட்டார்கள். இவர்கள் தங்கள் பிழையையுணர்ந்து நிறைவு செய்வது கடனும்.

தமிழாராய்ச்சி மகாநாட்டில் நாவலருக்கு சிலைஎடுக்காமல்விட்ட பெருந்தவறை நினைத்து சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் சிலைஎடுக்க உன் நடவடிக்கை எடுப்பார்களாக.

# 1968-ம் வருடமே வா!

வெள்ள அகதிகளின் வேதனை இன்னமும் தீரவில்லை. பால்மா பற்ருக்குறையால், பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல் இன்னமும் செம்மையாக ஓயவில்லை. படித்துவிட்டு வேலைதேடுவோரின் பயணங்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இருந்தாலும் புதிதாகவரும் உன்னை நாங்கள்நேசக்கரங்கொண்டுநெஞ்சார வரவேற்கிருேம்.

நீ என்னவெல்லாம் எங்களுக்குக் கொண்டுவரப்போகின்ருயோ எங்களுக்குத் தெரியாது. பிணியையும் கவலையையும் கொண்டுவரப் போகின்ருயோ? பகையையும் பேரிடிகளையும் மூட்டிவிட்டு வேடிக்கைபார்க்கப் போகின்ருயோ என்ற பயம் கூட எழத்தான் செய்கின்றது.

சமீபகால வருடங்களுக்கெல்லாம் உனக்கு விடுத்த அழைப்பைப் போலத்தான், உனக்களித்த வரவேற்பைப் போலத்தான் அளித்தோம், வரவேற்ருேம். ஆனுல்அவை இடையிடையே ஏற்படுத்திவிட்ட பயங்கர சம்பவங்கள் உன்னிடம் இவற்றை முன்கூட்டியே சொல்லத் தூண்டிவிட்டன.

‘பயம்-மனிதனை வாழவைப்பதும்அதுதான்சாக்காட்டி விடுவதும் அதுதான்’ இப்படிஓர் அறிஞர்சொன்னதாக ஞாபகம். பயம்இல்லாவிட்டால் பாதுகாப்புகள் தேட மனிதன் முனைந்திருப்பானு அல்லது இறைவனைத் தான்அவனுக்குநினைக்க நேரமிருந்திருக்குமா? தான்வாழவேண்டும். தன்பிள்ளைகள், குடும்பம், சந்ததி, நாடு இவையெல்லாம்வாழவேண்டுமே என்ற ஒருவித பயம்தான் அவனுக்கு இறைவன் மீது இருக்கும் பக்தியை கூட்டிவிடுகிறது. இந்தப் பயத்தினுல் தான் அவன் இறைவனிடம் அபயம் தேடுகின்ருன். ஆனுல் இந்தப் பயமே வேறு வழியில் அதிகரித்துவிட்டால் வேறு யாரும் உடந்தையாக இல்லாமல் தானே செத்து மடிந்துவிடுகிருன்.

1968-ம் வருடமே உன்னைக் கண்டும் பயந்துவிட்டேனென நீ மெல்லிய சிரிப்புச் சிரிப்பது போல் தெரிகிறது. நேசக்கரம் கொண்டுதான் அழைப்பதாக முன்னமேயே சொல்லிவிட்டு எதற்காகப் பயப்படவேண்டும். ‘ஊழ்வினையாவையும் உழைப்பால் [illegible]’— உன் அண்ணன்மார்கள் எல்லோரும் வந்தும் அழிக்க முடியாத அமரக் கவிகளின் சவால் இது. இதை உனக்கும் இறுமாப்புடன் தான் சொல்கிறேன். ஊழ்வினையைக்கூட எரிக்கலாமென அவர்கள் தைரியம் கூறியிருக்கும் போது புதிதாக ஏற்படும் வினைகளைத் தடுக்கவா நமக்கு சக்தியில்லாமல் போய்விடப்போகிறது?

வருமுன்னரே உன்னுடன் ஏதோ தர்க்கத்துக்குத் தயாராகிவிட்டதாக நினைக்காதே. காற்றைத் தென்றலாக்கு, உஷ்ணத்தை நல்ல உயிர் வளர்க்க உதவு. பிரிவுகளை இணைக்க வழி வகு எல்லாமாக உன் சக்திகளையெல்லாம் இந்த உலகமே வாழ்ந்து உன்னைக் கைகூப்பி வாழ்த்த வழி செய் இதுதான் எமது வேண்டுகோள்' புதிதாகவரும் உனக்கும் எமக்குமிடையில் எதற்குத்தான் வீணுன தர்க்கம் குதர்க்கம் எல்லாம். சமாதானமாக வாழ்வோம். 1968-ம் ஆண்டே வா! உன் நல்லாட்சிக்கு நம் இதயம் நிறைந்த ஆசி.

—கணேஷ்

# வீடிழந்த குடும்பங்களை எதிர்நோக்கும் பெரும்பிரச்னை

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம்தாராக்குளத்தில் வெள்ளத்தினுல் வீடிழந்த நடும்பங்கள் யாழ். அடைக்கலமாதா கோவில் பாடசாலையில் அடைக்கலம் புகுந்துள்ளது தெரிந்ததே.

அடைக்கல மாதா கோவிலின் வளவுக்குள்ளேயே பாடசாலை இருபப்தால் ஜனவரி பாதம் நான்காம் திகதி பாடசாலை ஆரம்பமாவதால் இவர்கள் இனி எங்கே தங்குவதெனபு ரியாதுதிகைக்கின்றுர்கள். இவர்களுடையவீடுகள் எல்லாம் தரைமட்டமாகி விட்டதனுல் இவர்கள் புதிய வீடு கட்டியே குடியேற வேண்டியுள்ளனர். அரசாங்கத்தினது உதவியைப் பெற்று தாங்கள் இப்போதைக்கு வீடுகட்ட முடியாதிருப்பதாகவும், இனிதங்குவதற்கு வசதியில்லையெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தாழ்மைக் குணத்தின் உண்மைப் பொருள் 'நான்' என்னும் பாவம் அறவே மறைதலாகும். 'நான்' என்னும் உணர்வு அழிதலே மோட்சம். ஆகவே தாழ்மைக் குணத்தை ஒழுக்க முறைகளில் ஒன்ருய்க் கொள்ள முடியாது.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஸு மார்கழி மீ 17உ (1-1-68)


## 1968

1968 இன்று பிறக்கிறது. நாட்டுக்கும் உலகுக்கும் செய்ததெல்லாம் போதும் போதும் போய்வா என்று நேற்றுடன் முடிவடைந்த 1967ம் ஆண்டுக்குப் பிரியாவிடை கொடுத்தனுப்பியமக்கள், இன்று 1968-ம்ஆண்டை, சிறிது அச்சம் இருப்பினும், நம்பிக்கையுடன் வரவேற்கிருர்கள்.

1967-ம் ஆண்டு பிறந்த போது அதையும் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும்தான் வரவேற்ருர்கள் ஆரம்பத்தில் நல்லவன் போல் நடித்து பின்னர் அது நயவஞ்சகம் செய்துவிட்டது. 1967-ம் ஆண்டு ஏற்படுத்திய உணவு நெருக்கடி, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டப் பெருக்கம், ரூபாய் மதிப்புக்குறைப்பு, வேலை நிறுத்தம், சென்ற பல வருடங்களில் நாடேகண்டிராத கடும்மழை, பெருவெள்ளம், பேய்க்காற்று ஆகிய கொடுமைகளின் சுவடு இன்னும் நீங்கவில்லை. இந்தச் சுவடுகளையும் விளைவுகளையும் அகற்றி நாட்டில்அமைதியும், சுபீட்சமும், சமூக ஐக்கியமும் நிலவ இன்று பிறக்கும் புத்தாண்டு உறுதியுடன் செயலாற்றுமென்ற மக்களின் நம்பிக்கையை அது நிறைவேற்றுமென்று நம்புவோம்.

நமதுநாட்டில் இன்றும் நேற்றும் நிலவும் சகல பிரச்னைகளுக்கும் — சகல விஷயங்களும் அரசியலாக்கப்பட்டு — அரசியல்வாதிகளே காரணமாக உள்ளனர். நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், மேடாக இருந்தாலும், பள்ளமாக இருந்தாலும் அங்குவாழும் மக்கள் நல்லவர்களாக இருந்தால் அந்த இடம் செழிக்கும்; வளரும்; புகழ் பெற்று மிளிரும் என்பது ஒளவைப் பிராட்டியின் கருத்து. நமது நாட்டின் முன்னேற்றமும், அமைதியும் நம்நாட்டு மக்கள் கையில்தானுள்ளது. பதவிப் போட்டி, அதிகார வேட்கை ஆகியவற்றை சிறிது காலத்துக்காவது மறந்து, ஒத்திவைத்து, நாட்டின் நலனையும் நாட்டு மக்களின் நலனையும் கருத்தில்கொண்டு நமது அரசியல், சமூக, சமயத்தலைவர்கள் ஒன்று சேர்ந்து சர்ச்சைக்குரிய விஷயங்களை பின்போட்டு நாட்டின் முன்னேற்றத்துக்கான குறுகியகாலப் பொதுத்திட்டமொன்றை வகுத்து செயலாற்ற இப்புதிய ஆண்டிலாவது முன்வந்தால் நம்மைப்பீடித்த துன்பங்கள் யாவும் பறந்தோடிவிடும் என்று நிச்சயமாக நம்பலாம்.

## உலக சமாதான தினம்

இன்று பிறக்கும் புத்தாண்டுத் தினத்தை சமாதான தினமாக அனுஷ்டிக்கும்படி பரிசுத்த ஆருவது சின்னப்பபாப்பரசர் உலக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர். இன்று மட்டுமல்ல ஒவ்வொரு ஆண்டின் முதல் திகதியை உலக நாடுகள் அனைத்தும் ''சமாதான தினமாக'' அனுஷ்டிக்க முன்வருமாறும் சாதிசமய வேறுபாடின்றி உலக மக்கள் அனைவரும் அவரவர் விரும்பும் முறையில் இத்தினத்தில் சமாதானத்தை வற்புறுத்துவதற்கான முறையில் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் பாப்பரசர் கோரியிருக்கிருர். பாப்பரசரின் இந்த அழைப்பு நீடித்த சமாதானத்திற்கான மற்ருெரு முக்கிய நடவடிக்கை என்று யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ கூறி வரவேற்றிருக்கிருர். உலகநாடுகள் பலவும் பாப்பரசரின் அழைப்புக்கு மதிப்புக்கொடுத்து சமாதானத்துக்காக ஒரு தினத்தை யாவது ஒதுக்குமென்று எதிர்பார்க்கலாம்.

வியட்னும் சண்டை ஓயவில்லை, மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை, அணுஆயுத உற்பத்தியு பரீட்சையும் நின்றுவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் காணக்கூடியதாக இல்லை; வல் லரசுகளுக்கிடையில் ஆயுதப்போட்டி ஓயவில்லை; நாடுகளுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் பரஸ்பரம் பயமும் அவநம்பிக்கையும் நீடித்துவருகின்றன. இந்நிலையில் உலகில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தமுடியுமென்ருே, ஏற்படுமென்ருே எதிர்பார்க்க முடியாது. உலகில் என்றுமே நிரந்தர சமாதானம் நிலவியதாகவும் சரித்திரம் கிடையாது. ஆயினும் வருடத்தில் ஒரு தினத்தையாவது சமாதான வாழ்வுக்கு அர்ப்பணித்தால் பகைமையும். பரஸ்பர பயமும் சந்தேகமும், அவநம்பிக்கையும் குறைய வாய்ப்பு ஏற்படலாம். இதன் பயனுக ஒரு நாளைய சமாதானம் படிப்படியாக நீடித்து ஒரு வருடமே சமாதான வருடமாக மாறவும், மக்களும் அரசுகளும் தங்கள் முயற்சிகளை ஆக்கபூர்வமான வழியில் திருப்பி சுபீட்சப் பாதையில் காலடி எடுத்துவைக்க மார்க்கமும் ஏற்படலாம். எனவே பாப்பரசரின் அழைப்பு உலக அரசுகளுக்கு மட்டுமல்ல சிறிய சமுதாயங்களுக்கும் பொருந்தும். தானதர்மம் வீட்டில்தான் தொடங்கவேண்டும். நமதுவீட்டிலும் சமூகத்திலும் நாட்டிலும் சமாதானம் நிலவினுல் உலகில் சமாதானம் நிலவுவது கடினமல்ல.

### இன்றைய பலன்

[1-1-68]

திங்கட்கிழமை

மார்கழி மீ 17 உ

நட்சத்திரம்- உத்தராடம்.

திதி- பிரதமை பகல் 8-27 மேல் துதியை.

சுபநேரம்- 12-30-2-00

ராகுகாலம்- 8—9-30

மேஷம் - பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

ரிஷபம் - எதிரி பகை, ஏக்கமிகுதி.

மிதுனம் - களஸ்திர சுகம். கண்ணியம்சேரும்.

கடகம்-நம்பிக்கெடுதல் நஷ்டமடைதல்.

சிம்மம்-பிதாவழிச்சுகம் பெரியோர் மதிப்பு.

கன்னி - தொழில் நலன் தொடர்புகள் பெருகும்.

துலாம்- பொருள்வரவு. புதினம் கேட்டல்.

விருச்சிகம்-தானிய நஷ்டம், தனிவழிநாட்டம்.

தனுசு - குடும்பக்கவலை குறுக்குவழித் தலையீடு.

மகரம் - வாக்கில் மேம்பாடு, வசதிகள் பெருகும்

கும்பம - ஆசாரக் குறைவு, அவசரக்கோலம்

மீனம். வாகன சுகம் வாழ்விலும் நலம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## 'தலைமை ஆசிரியர் இடமாற்ற நிறுத்தம்'

கிளிநொச்சி, ஞாயிறு

'தலைமை ஆசிரியர்களை தற்பொழுது செயற்படுத்தப்படும் இடமாற்றத்திட்டத்தின்படி சேர்ப்பதில்லையென எமது கட்சிக்கு உறுதி அளிக்கப்பட்டும் கல்வித்திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர்களது பொறுப்பற்ற செய்கையால் சில தலைமையாசிரியர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்' இவ்வாறு கிளிநொச்சிபாராளுமன்ற உறுப்பினர் திரு கா.பொ. இரத்தினம் கல்வி மந்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

இந்தஇடமாற்றம் பெரும் கஷ்டத்தை ஆசிரியர்களுக்கு மாத்திரமல்லாது மாணவர்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் இந்த இடமாற்றங்களை உடன் நிறுத்திவைக்கவும்.''

## நயினுதீவில் சோலைவரி அறவிடப்படும்

நயினுதீவு, ஞாயிறு

நயினுதீவு கிராம சபையின் வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. சி. க. தம்பையா தலைமையில் நடைபெற்றது. சபையின் 1967-ம் 68-ம் ஆண்டு வரவு செலவு தமிழ் மூலம் தயாரித்து சமர்ப்பிக்கப் பட்டது. சபையின் நிதிநிலை மிக மோசமாக இருப்பதாகவும் ஆக்கமான வேலைகள் செய்யமுடியாமல் இருக்கிறது எனவும் நயினுதீவு கிராமசபையின் அந்தஸ்தும் நிதிநிலைமையும் மிக உயர்ந்த நிலையில் வருவதற்கு சோலைவரி அறவிடப்பட வேண்டுமெனவும் 1-ம் வட்டார உறுப்பினர் திரு. [illegible] பின்னர் ஏகமனதாக [illegible] யது.

# நாளை மறுதினம் ஆரம்பமாகும் 2-வது

# முக்கால மைல் நீள

# சிறப்பை விளக்கும்

# விழாக்கோலம்

# சென்னை ம

## இன்று அண்ணு சிலை

### விவேகானந்தா திருக்குறட் கலண்டர் 1968

வழமைபோல் அழகான விதவிதமான வர்ணப்படங்களுடன் 1968-ம் வருடத்துக்கான விவேகானந்தா திருக்குறட் கலண்டர்கள் இப்போது வெளியாகி விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நாள், நட்சத்திரம், திதி, திருவிழாக்கள், விசேஷ நாட்கள், பெரியோர் ஜனன-மறைவு தினங்கள், விடுமுறை தினங்கள் ஆகிய சகல விபரங்களுடன் திருக்குறளும் அதன் பொழிப்புரையும் கொடுக்கப்பட்டுள்ளன. வீடுகள் தோறும் மட்டுமல்ல காரியாலயங்களுக்கும் நன்கு பயன்தரக்கூடிய கலண்டர் இது என்று கூறலாம்.

—எம்.

### ஜெர்மனியின் வெள்ள நிவாரண

கொழும்பு, ஞாயிறு

வெள்ள நிவாரண நிதியுதவியாக ஜெர்மனிஇலங்கை அரசாங்கத்திடம் 40,000 ரூபாயை கையளித்துள்ளது. வெளிவிவகார அமைச்சினுல் கையேற்கப்பட்ட இந்த நிவாரண உதவியை சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட சிலாபப்பகுதி மக்களுக்கு வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சிலாபப் பகுதியில் வீடிழந்தவர்களுக்கு வீடுதிருத்தவும், கட்டவும் இப்பணம் உதவியாக இருக்குமென அரசாங்கம் கருதுகிறது.

### கால்நடைபயணம்

சுழிபுரம், ஞாயிறு

நேற்றையதினம் சித்தங்கேணிச் சந்தியிலிருந்து கீரிமலைக்கு செல்வதற்காக இ. போ. ச. பஸ்ஸுக்காகக் காத்திருந்த பிரயாணிகள் கால் நடையாகவே கீரிமலை போய்ச்சேர்ந்தனர். காலை எட்டு மணி தொடக்கம் மூன்று மணித்தியாலம் காத்திருந்த இப்பிரயாணிகள் வேறு வழியின்றி கால்நடையிலேயேபோய்ச் சேர்ந்தனர். இதுசம்பந்தமாக இ. போ. ச. அதிபருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழரின் சிறப்பையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், பெருமையையும் எடுத்துக் காட்டும் விதத்தில் பெருமளவு செலவில் முக்கால் மைல் நீளத்துக்கு அலங்காரப்பவனி நாளை மறுதினம் சென்னையில் ஆரம்பமாகும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக இடம்பெறும். இந்தத் தமிழ் கண்காட்சி கவர்ச்சிகரமான முறையில் அமையுமென்று தமிழக பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணுநிதி தெரிவித்தார்.

தமிழாராய்ச்சி மகாநாடு ஏற்பாடுகள் சம்பந்தமான விபரங்களை திரு. கருணுநிதி நிருபர்களிடம் கூறினுர்.

### அலங்காரப் பவனி

ஜனவரி 3-ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு சென்னை ஐலண்ட் மைதானத்திலிருந்து இந்தப் பிரமாண்டமான ஊர்வலம் ஆரம்பமாகும். ஊர்வலத்தின் தொடக்கத்தில் அலங்கரிக்கப்பட்ட யானைகள் ஒன்றன்பின் ஒன்ருகச் செல்லும். அதையடுத்து நாதஸ்வரப் பள்ளி மாணவர்களின் நாதஸ்வர இசை முழங்கும். அதன்பின் ஓர் அலங்கார வண்டியில் தமிழ்த்தாயின் உருவம் சித்தரிக்கப்பட்டு, ஐம்பெருங்காப்பியங்களான தமிழ்ச் செல்வங்களும் இடம்பெற்றிருக்கும். மூன்ருவதாகச் செல்லும் அலங்கார வண்டியில் திருவள்ளுவர் கண்ட தமிழகம் சித்தரிக்கப்படும். பாண்டிய மன்னனிடம் கண்ணகி வழக்குரைத்த காட்சி நான்காவதாகச் செல்லும் வண்டியில் இடம்பெற்றிருக்கும். அடுத்த அலங்கார வண்டியில் பரதநாட்டியக் குழுவினர் இருப்பர்.

அண்ணலும் நே
அவளும் நோக்க

மிதிலை நகரில் அண்
நோக்க அவளும் நே
இராமர் - சீதை ச
பட்ட அற்புதக்
கம்பர் தரும் காட்
ஆருவது வரும் அ
வண்டியில் இடம்பெ
ஒளவை மூதாட்
அதியமான் நெல்
ஈந்த காட்சியும், ப
ளல் முல்லைக்குத்
காட்சியும் அடுத்
வருகின்றன.
தன் கன்றின்மீது
திச்சோழனின்மகன்
ஏற்றிக்கொன்ற செய்
ஆராசிய்மணியின் மு
மன்னனுக்குத் தொ
ன்ற காட்சி 10-வ
செல்லும் அலங்கார
யில் சித்தரிக்கப்பட்
கும். இதையடுத்து
யாட்டமும், மற்றும்
த்துசிறப்பினை விளக்கு
ழ்ச்சிகளும். இராமிய
மும் இடம்பெறும்.
22-வதாகச் செல்லும்
கார வண்டியில்
யார், பாரதிதாசன்,
மணிதேசிய விநாயகம்
ஆகியோரின் உருவ
இருக்கும். அதைய
வரும் அலங்கார வண்
கப்பலோட்டிய தமிழ
உ. சிதம்பரனுரின் உ

## ''ஆற்றலுக்கு தமிழக எழுத்தாளர் தந்தமதிப்பு''

யாழ்ப்பாணம், திங்கள்

சென்னையில்தமிழ் எழுத்தாளர்சங்கத்தலைவராக ஈழத்தைச் சேர்ந்த திரு சோ சிவபாதசுந்தரம் தெரிவு செய்யப்பட்டமையை பாராட்டி யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் சார்பாக செயலாளர்களுள் ஒருவரான 'யாழ்வாணன்' கடிதமொன்றை அவருக்கு எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர்குறிப்பிட்டிருப்பதாவது—

இலங்கை எழுத்தாளர்கள் இந்திய எழுத்தாளர்களால் புறக்கணிக்கப் படுகின்றனர் என்று இங்குகூச்சல் போடும் நிலையில் உங்கள் திறமையையும், ஆற்றலையும் மதித்து சென்னை எழுத்தாளர்கள் தலைவராகத் தெரிந்துள்ளமை அவர்களது நியாயபூர்வமான இலட்சியத்தைப் பிரதிபலிக்கின்றது. எழுத்தாளர்கள் இலங்கை, இந்[illegible] பாகுபாடின்றி [illegible] திறமையே அவர்களின் உயர்வுக்குக்காரணம் என்பதை உங்கள் மூலம் உணர்கின்ருேம். வேறுபாடற்ற உன்னதமான இலக்கிய சிருஷ்டியாளர்கள் எங்கும் எப்போதும் பாராட்டுக்குட்படுவர் என்பதை உங்கள் தெரிவு எடுத்துக் காட்டுகிறது.

நீங்கள் தலைவராகப்பணி புரியும் காலத்தில் இலங்கை எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பட வாய்ப்பேற்படுத்தித் தருவதோடு முன்னுளில்தமிழுக்கும் சைவத்துக்கும்இந்தியாவில் பணிபுரிந்த ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியவர்கள் போன்று நீங்கள் பெருந்தொண்டாற்ற வேண்டுமென்று விழைகிருேம்.

நீங்கள் எழுதிய மாணிக்கவாசகர் அடிச்சுவடு, புத்தர் அடிச்சுவடுகள்போல் எதிர்காலத்தில் ஆறுமுகநாவலர், தாமோதரல்பிள்ளை ஆகியோரின் அடிச்சுவட்டில் உங்கள் பணி தொடரவேண்டுமென்று ஆசிக்கிருேம்'. (நி)

சங்கத்தின் பு

யாழ்ப்பாணம், தி
அரசாங்க சம்பள
யக் கமிஷனில் சுரு
தொழிலாளர் சங்கப்
நிதிகளாகவுள்ள மூவர்
காலாவதியான சுரு
தொழிலாளர் சங்கத்
சேர்ந்தவர்களென ய
பாணத்திலுள்ள இன்
சுருட்டுத் தொழிலாளர்
கத்தினர் எடுத்துக்கா
யுள்ளனர்.
குறிப்பிட்ட சங்க
லுள்ள மூவரும் 19
ஆண்டுக்குப் பின்னர்
புதுப்பிக்கப்படாத சங்
கத்தவர்களென்றும் அ
கள் தற்போது சம்பள
ணயசபையில் அங்கம்
க்க யோக்யதாம்சம்
லாதவர்களென்றும் அ
இலங்கைத் தமிழ்க்காங்
ஸின் கீழுள்ள சங்கம் த
புகாரில் குறிப்பிட்டுள்ள

ஸ்தலஸ்தாபன.

[1-ம் பக்கத் தொடர்

துறை, காங்கேசன்துறை
வல்வெட்டித்துறை, ச
கச்சேரி, சுன்னுகம், நெ
யடி, உடுப்பிட்டி, கட்
வேலி, புலோலி, அச்சுவே
கோப்பாய், திருநெல்வே
கொக்குவில் ஆகிய
களைச் சேர்ர்ந்த நமது சா
உறுப்பினர்கள் கறுத்
பட்டிகட்டி துக்கதின
அனுஷ்டிப்பார்களென் று
திரு. பழனி தெரிவிக்கிரு
தாமும் மற்றும் சில உ
பினரும் ஸ்தலஸ்தாப
அமைச்சை சேர்ந்த கா
யாலயங்கள் முன் உண்
விரதம் இருக்கப்போவதா
வும் அவர் தெரிவிக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-வது உலகத்தமிழாராய்ச்சிமகாநாடு

# நீளத்துக்கு தமிழா ம் அலங்காரப் பவனி

# லம் பூணுகிறது ள மாநகரம்

## - சிலை திறப்பு வைபவம்

### ணலும் நோக்க ளும் நோக்க

லை நகரில் அண்ணலும் க அவளும் நோக்கிய ர் - சீதை சம்பந்தப் அற்புதக் காட்சி, தரும் காட்சியாக து வரும் அலங்கார டியில் இடம்பெறும்.

வை மூதாட்டிக்கு மான் நெல்லிக்கனி காட்சியும், பாரிவள் முல்லைக்குத் தேரீந்த சியும் அடுத்தடுத்து ன் றன.

கன்றின்மீது மனுநீ ாழனின்மகன் தேரை க்கொன்ற செய்தியை சிய்மணியின் மூலம் னுக்குத் தெரிவிக்கி காட்சி 10-வதாகச் லும் அலங்கார வண்டி சித்தரிக்கப்பட்டிருக் இதையடுத்து காவடி டமும், மற்றும் தமிழக றப்பினை விளக்கும் நிக ளும். கிராமிய நடன இடம்பெறும்.

தாகச் செல்லும் அலங் வண்டியில் பாரதி பாரதிதாசன், கவி தேசிய விநாயகம் பிள்ளை யாரின் உருவச்சிலை கும். அதையடுத்து அலங்கார வண்டியில் லோட்டிய தமிழன் வ. சிதம்பரனாரின் உருவச் சிலையிருக்கும். 25-வது வரும் வண்டியில் தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதஐயர், மறைமலையடிகள், திரு. வி. க. ஆகியோரின் உருவச் சிலையிருக்கும். அடுத்த அலங்காரவண்டியில், தமிழ்வளர்த்த மேல்நாட்டாரான வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யு.போப் ஆகியோரின் உருவச் சிலைகள் இருக்கும். எல்லாமாக 27 அலங்கார வண்டிகள் ஊர்வலத்தில் இடம்பெறும்.

ஊர்வலத்தில் செல்லும் ஒரு அலங்கார வண்டிக்கும், மற்றொரு அலங்காரவண்டிக்குமிடையில் மாணவர்கள், சீரணியினர் அல்லது விசேஷ சின்னம் அணிந்தவர்கள் ஆக 100 பேர்கள் செல்வர். வேறுயாரும் அனுமதிக்கப் படமாட்டார்கள்,

### அண்ணா உருவச்சிலை

அன்று தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரையின் உருவச்சிலையை மாலை டாக்டர் ராமசாமி முதலியார் திறந்து வைக்கிறார். அமைச்சர் திரு நெடுஞ்செழியன்வரவேற்புரை நிகழ்த்த, அமைச்சர் கருணாநிதி சிலையை ஏற்றுக்கொண்டுநன்றி கூறுவார். அண்ணாவின் சிலை மவுண்ரோடு ரவுண்டாணாவில் அமைந்துள்ளது.

நாளைமாலை கடற்கரை காந்தி சிலையருகில் தமிழ் வளர்த்த சான்றோர்க்கும் ஆன்றோர்க்கும் சிலை எடுக்கும் வைபவம் நடைபெறும். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வழங்கிய வள்ளுவர் உருவச்சிலையை முத்தமிழ் காவலர் கி. ஆ.பெ. விசுவநாதன் திறந்து வைப்பார். கவியரசர் கம்பர் சிலையை தமிழக விவசாயத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி தலைமையில் முன்னாள் முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் திறந்து வைப்பார். மற்றச்சிலைகளும் முறையே திறந்துவைக்கப் படும்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ ராமகிருஷ்ணன் சிலைகளை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவிப்பார்.

விழாப்பந்தலின் சொற்பொழிவுகள் முடிந்த பின்னர், திறப்பாளர்களும் கடற்கரையின் தென்கோடியில் அமைந்துள்ள வீரமாமுனிவர் முதலாக துறைமுக அலுவலகத்தின்முன் அமைந்திருக்கும் வ. உ. சி. ஈறாக உள்ள பத்துப்பேருடைய சிலைகளுக்கும் வணக்கம் செலுத்துவர்.

### பொருட்காட்சி

3-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழகதேர்வுமண்டபத்தில்பொருட்காட்சி திறப்புவிழா ஆரம்பமாகும். சென்னை பல்கலைக்கழக, துணை வேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் தலைமையுரை நிகழ்த்துவார். ராஜாஜி சிறப்புரை நிகழ்த்துவார்.

தமிழகப் புலவர் குழுவிற்கு ஐலண்ட் மைதானத்தில் வரவேற்பளிக்கப்படும். தமிழக அமைச்சர்களுடன் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் உட்பட பலர் புலவர்களை வரவேற்றுப் பேசுவர்.

இம்மாதம் 10-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டுக்காக சென்னை நகரில் போக்குவரத்து ஏற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

---

## ...கத்தின் புகார்

யாழ்ப்பாணம், திங்கள் சாங்க சம்பள நிர்ண கமிஷனில் சுருட்டுத் ழிலாளர் சங்கப் பிரதி ளாகவுள்ள மூவர்பதிவு வதியான சுருட்டுத் ழிலாளர் சங்கத்தைச் ந்தவர்களென யாழ்ப் த்திலுள்ள இன்னோர் டுத் தொழிலாளர் சங் னர் எடுத்துக்காட்டி னர்.

ிப்பிட்ட சங்கத்தி ள மூவரும் 1959-ம் டுக்குப் பின்னர் பதிவு பிக்கப்படாத சங்கஅங் வர்களென்றும் அவர் தற்போது சம்பள நிர் சபையில் அங்கம் வகி யோக்யதாம்சம் இல் வர்களென்றும் அகில ங்கைத் தமிழ்க்காங்கிர கீழுள்ள சங்கம் தனது ரில் குறிப்பிட்டுள்ளது. [நி]

## சகோதரர்கள் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத்துறையைச் சேர்ந்த இருசகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட காணித்தகராறு சண்டையாக மாறி, இருவரும் கடுமையான காயத்துக்குள்ளாகி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளளனர்.

'மண்டாவினால் இருவருக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் மூத்தசகோதரன் ஏ. அருணாசலமும், இளைய சகோதரன் ஏ. குமாரவேலுவும் கரையூர்ப் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டனர்.

## ...லஸ்தாபன...

பக்கத் தொடர்ச்சி]

ற, காங்கேசன்துறை, வெட்டித்துறை, சாவ சரி, சுன்னாகம், நெல்லி உடுப்பிட்டி, கட்டை ி, புலோலி, அச்சுவேலி, ப்பாய், திருநெல்வேலி, க்குவில் ஆகிய கிளை ச் சேர்ந்த நமது சங்க ப்பினர்கள் கருத்தப் டிகட்டி துக்கதினம் ஷ்டிப்பார்களென் றும் பழனி தெரிவிக்கிறார். ம் மற்றும் சில உறுப் ரும் ஸ்தலஸ்தாபன மச்சை சேர்ந்த காரி யங்கள் முள உண்ணு தம் இருக்கப்போவதாக ஆவர் தெரிவிக்கிறார்.

யாழ். ஆஸ்பத்திரி

## பிரசவ வார்ட்டுகளை வேறு இடத்துக்கு மாற்ற யோசனை

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள இரண்டு பிரசவ வார்ட்டுகளும் இங்கிருந்து மாற்றப்படலாம். இதுசம்பந்தமாக சுகாதார அமைச்சு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத்தெரிகின்றது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி மிகவும் மோசமாகியுள்ள தென்றும், பிரசவ வார்ட்டிலும்கூட இடநெருக்கடி அதிகமாகியுள்ளதால் பல பிரசவத் தாய்மார்கள், நிலங்களிலும், விறாந்தைகளிலும்கிடந்து சிகிச்சைபெறவேண்டியுள்ளதாகவும் நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன், சுகாதார அமைச்சரிடம் தெரிவித்ததாகவும் இதனைத் தொடர்ந்தே சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிகின்றது.

இப்போதுள்ள இரண்டு பிரசவ வார்ட்டுகள் போதாதாகையால் இரண்டு மேல் மாடிகளைக்கொண்ட இரு கட்டடங்களை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளதாம்.

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் காணியிலேயே புதிய பிரசவ வார்ட்டுகள் அமைக்கப்படலாம் எனவும் தெரிகின்றது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலிருந்து பிரசவவார்ட்டை அகற்றி வேறு இடத்தில் அமைத்தால் தற்போது இங்கு நிலவும் நெருக்கடி குறையுமெனவும் டாக்டர் நாகநாதன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளாராம்.

# ரூ. 44,000 செலவில்நிறுவிய நெல்லியடி நவீன சந்தை

## இன்று திறப்பு விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடிப்பட்டினத்தில் 44,000 ரூபா செலவில் பூர்த்தியாகிக்கொண்டிருக்கும் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை ஆகியவற்றிற்கான புதிய கட்டிடங்கள் நாளை புத்தாண்டுப் பிறப்பன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு திறந்துவைக்கப்படவிருக்கின்றன. இவ்விரு சந்தைகளையும்அன்றைய தினம் பாரமெடுக்கும் நெல்லியடிப் பட்டின விசேட ஆணையாளரும், உதவி உள்ளூராட்சி ஆணையாளருமான திரு. எஸ். லி. மாணிக்கவாசகர் ஆடம்பரமற்ற முறையில் புதியகட்டிடங்களைத்திறந்து வைப்பார். சந்தையின் முன் புறத்தில் கடைகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளன. குத்தகை முறை நீக்கப்பட்டு டிக்கட் முறையிலேயே நெல்லியடி பட்டினசபை வியாபாரிகளிடமிருந்து வரி அறவிடும். இந்நவீன சந்தையின் பிரதம மேற்பார்வையாளராகத் திரு. மு. கனகரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். திருவாளர்கள் ரீ. பஞ்சராசா, எஸ். செல்வத்துரை கே. குலவீரசிங்கம்ஆகியோர் வரிஅறவிடும் உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இச்சந்தை மூலம் வருமானமாக 18,000 ரூபா கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

மியூசிக் அகடமி

## இசைவிழா இன்றுடன் பூர்த்தி

சென்னை, திங்கள்

சென்னை மியூசிக் அகடமி 41-வது இசைவிழா இன்றுடன் பூர்த்தியாகிறது

சென்னை மியூசிக் அகடாமியின் 41-வது சங்கீத மகாநாடும், இசைக்கச்சேரிகளும் ஸ்ரீ தியாகராஜர் இருநூறுவது ஆண்டுவிழாவும் ராயப்பேட்டை மியூசிக் அகடமி மண்டபத்தில் டிசம்பர் 20-ம் திகதி உத்திரப்பிரதேச கவர்னர் டாக்டர். வி கோபாலரெட்டி தொடக்கி வைத்தார். இதையடுத்து காலை 8 மணி முதல் 10மணி வரை இசைவிற்பனர்களின் சொற்பொழிவுகளும் வித்துவான்களின் இசைக்கச்சேரிகளும் நடைபெற்றன.

இம்முறை இந்த இசைவிழாவில் இரு நாகசுரக் கச்சேரிகள் இடம்பெற்றன. இதில் ஒரு கச்சேரிக்கு இலங்கையிலுள்ள திரு. என். கே. பத்மநாதன் குழுவினருக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. பேரறிஞர் உரையில் இலங்கை நீதியரசர் எச். டபிள்யூ. தம்பையா இசையைப்பற்றி உரையாற்றினார். (அள. நி)

---

## தொலைபேசி தொடர்பு சுருவில்

### உபதபால் கந்தோருக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

சுருவில் உபதபாற் கந்தோருக்கு தந்தி, தொலைபேசி வசதியைதபால்தந்திக் கட்டுப்பாட்டிலாகாவைச் சேர்ந்த திரு. கே நாகலிங்கம் ஆரம்பித்துவைத்துள்ளார்.

மேற்படி தபாற்கந்தோர் புதிய வசதிவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பகிரங்கக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், மாவட்ட தபால் அதிபர் திரு நாகலிங்கம், திரு. ...தாசன் ஆகியோர் பங்குபற்றி உரையாற்றினர். [நி]

கத்திக்குத்து சம்பவம்

## இருவர் சரண்

யாழ்ப்பாணம், திங்கள்

குருநகர் றெக்கிளமேசனைச் சேர்ந்த இராசத்தம்பி என்பவர் கத்திக்குத்துக் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுசம்பந்தமாக இருவர் கரையூர் பொலிசாரிடம் சரண்புகுந்துள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த எஸ். செபமாலை, எஸ். அல்பிறட் ஆகிய இருவரும் பொலிசில் சரண் புகுந்தவர்களாவர்.

கரையூர்ப் பொலிஸ் அதிகாரி திரு. எஸ். பி. ரத்னாயக்கா இதுசம்பந்தமாக தொடர்ந்தும் விசாரணை செய்து வருகிறார். [வி. நி.]

## வீடிழந்த குடும்பங்கள்

உடுப்பிட்டி, ஞாயிறு

அண்மையில் பெய்த கடும் மழையினாலும் புயலினாலும் கரணவாய் தெற்குப்பகுதியில் 275 குடும்பங்கள்தமது வீடுகளை இழந்து அகதிகளாகியுளளதாகக் கரணவாய் தெற்கு கிராமசேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார். இப்பகுதியில் 80 பனைகள் அடிசாய்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடிக்க சென்றவர் கடலுக்கு பலி

யாழ்ப்பாணம். திங்.

பாஷையூர் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மயிலிட்டியைச் சேர்ந்த திரு. வி. வில்வராசா என்பவர் கடலில் மூழ்கி மரணமானார்.

திரு. வில்வராசாவுக்கு வழக்கமாகவே திடீரென வலிப்பு ஏற்படுவதென்றும் அவ்வலிப்பு காரணமாகவே அவர் கடலில் வீழ்ந்து இறந்தாரெனவும் விசாரணையின் போது தெரியவந்தது.

இம்மரணம் சம்பந்தமாக விசாரணைசெய்த திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் நீரில்மூழ்கியதால் மரணமேற்பட்டதாகத் தீர்ப்பளித்தார், [வி. நி.]

## இடமாற்றம்

இமையாணன், ஞாயிறு

மதவாச்சி தபால்கந்தோரில் தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. பத்மநாதன், யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோருக்கு மாற்றலாகியுள்ளார்.

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்றத்தின் புதிய சனசமூகநிலையத்தை வடமாகாண அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா இம்மாதம் 15-ம் திகதி மாலை திறந்து வைப்பார். இப்புதிய சனசமூக நிலையத்தின் திறப்புவிழா வைபவம் திரு. ஹென்றி ஆசீர்வாதம் தலைமையில் நடைபெறும்.

## சைக்கிள் திறப்பு

யாழ்ப்பாணம் பன்றிக்கோட்டுபிள்ளையார் கோவிலுக்கு முன்பாக சைக்கிள் திறப்புடன் கோர்வையொன்றைக் கண்டெடுத்து ஆர். வைத்தீஸ்வரன் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில்ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## நாடும் நடப்பும்

'பியூப்பிள் டீச்சர்' என்ற மாணவ ஆசிரியர் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா?

மாணவ ஆசிரியராக உத்தியோகம் பெறவிரும்பும்வோர் அதற்கான பரீட்சை எடுக்கவேண்டும். பரீட்சையில் சித்திபெற்றபின் நேர்முகப்பரீட்சைக்கும் தோற்ற வேண்டும். இது மாமூல் நடவடிக்கைகள் தான்.

படித்தவாலிபர்களின் வேலையில்லாத்திண்டாட்டத்தைக் குறைக்கவும்அதே சமயம் ஆசிரியர் பற்றாக்குறையைச் சமாளிக்கவுமே 'மாணவ ஆசிரியர்' திட்டம் கொண்டுவரப்பட்டது என்று கூறலாம்.

1966-ம் ஆண்டில் மாணவ ஆசிரியர் பரீட்சை ஒன்று வைக்கப்பட்டது. இதற்கு பலர் தோற்றினர்.

படித்துவிட்டு, படிப்பை மறந்து போயிருந்த படித்த வாலிபர் பலர் திடீரென்று தம்மைத் தயார்செய்து கொண்டு மாணவ ஆசிரிய பரீட்சை எடுத்தனர்.

பரீட்சை முடிந்துவிட்டது முடிவு எப்போது வரும்?

1966-ம்ஆண்டில்பரீட்சை எழுதி முடித்த பின்பு இந்தக் கேள்வியைக் கேட்கத் தொடங்கினார்கள். இன்னும் இதே கேள்வியைத்தான் கேட்கிறார்கள். கேள்விக்கு இன்றுவரை பதில் கிடைக்கவில்லை.

பரீட்சை இலாகாவினர் தயாரித்து அளிக்கும் கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவ ஆசிரிய பரீட்சார்த்திகள், 'பரீட்சை முடிவுகள் எப்போது வெளிவரும்' என்ற கேள்வியைத்திருப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பதில் சொல்லவேண்டிய கடமையும் பொறுப்பும் பரீட்சை இலாகாவுக்கு இல்லை; கல்வி இலாகாவும் கல்வி அமைச்சரும் பதில் சொல்லட்டும்.

முடிவுவெளிவராததற்குப் பதில் சொல்வது ஒருபுறமிருக்கட்டும், முதல்வந்த பரீட்சைக்கு முடிவுவராதிருக்கையிலேயே மற்றொரு பரீட்சை எதற்கு என்ற கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டும்.

1966-ம் ஆண்டில் நடந்த மாணவ ஆசிரியர் பரீட்சை முடிவு வெளியாகவில்லை. இப்போது 1968-ம் ஆண்டில் மற்றொரு மாணவ ஆசிரிய பரீட்சை வைக்கப் போவதாக கல்வி இலாகா அறிவித்திருக்கிறது. முன்னர் நடந்த பரீட்சைக்குத் தோற்றியவர்களின் நிலை என்ன? மாணவ ஆசிரியர் நியமனத்தில் வகுப்புவாதம் இடம் புகுந்திருக்கிறதென்ற பொதுப்படையான குற்றச்சாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறதா?

ஃ ஃ ஃ

இன்று புத்தாண்டு பிறக்கிறது. பழைய ஆண்டில் செய்த தவறுகளை புதிய ஆண்டிலும் செய்யாதிருக்க வேண்டும். கடந்த கால அனுபவங்களிலிருந்து புதிய ஆண்டில் தவறுகளைத் திருத்தி நல்ல முறையில் நடக்க உறுதி கொள்ளவேண்டும். இது தனிமனிதனுக்கும் பொருந்தும் சமுதாயத்துக்கும் பொருந்தும்.

கல்வி இலாகாதான் குழப்பம் நிறைந்த, தவறுகள் பல செய்யும் ஓர் இலாகாவாகத் தோன்றுகிறது. கல்வி சீராகஇருந்தால்தான்சமுதாயம் சீராகஇருக்கும். எனவே கல்வி இலாகா புதுவருடத்திலாவது பழைய தவறுகளைச் செய்வதில்லையென இன்று சங்கற்பம் செய்து கொள்ளட்டும்.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1967-ல் அமெரிக்க, ரஷ்ய விண்வெளி வீரமரணம்

### ஜனவரி

ஜன. 5-'திருப்புகழ்மணி' திரு. கிருஷ்ணசாமி ஐயர் சென்னையில் காலமானார்.

ஜன. 13- டோஜோ நாட்டில் இராணுவப் புரட்சி.

ஜன. 18- டமன், டியூ இரண்டும் இந்திய யூனியன் பிரதேசங்களாகத் தொடர்ந்திருக்க முடிவு.

ஜன. 22 ஹெல்சிங்கியில் ஒருவர் 170 மணி நேரம் உயிருடன் சமாதி இருந்து, உலக சாதனை நிறுவினார்.

ஜன. 23-கர்நாடக சங்கித மேதை அரியக்குடி ஸ்ரீ ராமனுஜ ஐயங்கார் காலமானார்.

ஜன. 25-தென்வியட்னும் உதவிப் பிரதமர் ஜெனரல் நூகன் ஹூகோ பதவியிலிருந்து நீக்கம்.

ஜன. 27- அமெரிக்க விண்வெளி வீரர் மூவர் தீ விபத்தில் எரிந்துமாண்டனர்.

ஜன. 29- ராஜஸ்தானில் 10-ம் நூற்றுண்டுக்கால விஷ்ணு விக்கிரகம் கண்டு பிடிக்கப்பட்டது.

# தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சி

### பெப்ரவரி

பெப். 1- இரண்டாவது விபத்தொன்றில் இரண்டு அமெரிக்க விண்வெளி வீரர் உயிரிழந்தனர்.

பெப். 2- இந்திய எல்லையில் பாக். விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பெப். 9- ஸியாரா லியோனில் திடீர் இராணுவப் புரட்சி நசுக்கப்பட்டது.

பெப். 12- 7 கோடி ஆண்டுகளுக்கு முன்னதான பாம்பினத்தைச் சேர்ந்த ஒரு பிராணியின் எலும்புக்கூடு ரஷ்யாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

பெப். 14- இந்தியக்குடியரசின் நான்காவது பொதுத் தேர்தல் ஆரம்பம்.

பெப். 17- யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவைக் கொலை செய்ய வியன்னுவில் சதி: 6 பேர் கைது.

பெப். 21- பிரசல்ஸில் ஏற்பட்ட வெள்ளத்தில் 223 பேர் உயிரிழந்தனர்.

பெப். 23- தமில் நாட்டில் தி. மு. க. வெற்றி.

### மார்ச்

மார்ச் 5- மொரொக்கோவில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் 120 பேர் பலி.

கனடா கவர்னர் ஜெனரல் மேஜர் ஜெனரல் ஜோர்ஜ் பிலியஸ்வேனியா காலமானர்.

மார்ச் 7. ஜெய்ப்பூரில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் 7 பேர் மரணம்.

மார்ச் 11- இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ பதவி நீக்கம்.

மார்ச் 13- திருமதி இந்திரா காந்தி தலைமையில் இந்தியாவின் புதிய மந்திரி சபை பதவியேற்றது.

மார்ச் 21- பிரான்சுடன் தொடர்பு நீடிக்க சோமாலிலாண்ட் முடிவு.

மார்ச் 22- சியராலியோனில் இராணுவ ஆட்சி.

பிரேஸிலில் கடும் புயல்: 400 பேர் மரணம்.

மார்ச் 24- சியராலியோனில் இரண்டாவது புரட்சி.

மார்ச் 26- இங்கிலாந்தில் பெரிய எண்ணெய்க் கப்பல் 'டொரி கன்யொன்' தரை தட்டி இரண்டாகப் பிளந்தது.

மார்ச் 28- அபிவிருத்தியடையாத நாடுகளுக்குச் சர்வதேச உதவி நிதி திட்டமொன்றை நிறுவுமாறு பாப்பரசர், போல் உலக நாடுகளுக்கு வேண்டுகோள்.

### ஏப்ரல்

ஏப்ரல் 5- அமெரிக்க உபஜனாதிபதியைக் கொலை செய்ய மே. ஜெர்மனியில் சதி: 11 பேர் கைது.

ஏப்ரல் 6- பிரான்ஸின் புதிய பிரதமராக திரு. பொம்பிடோ பதவியேற்றார்

ஏப்ரல் 10- இந்திய ராஷ்டிரபதிப்பதவிக்குப்போட்டியிடுவதில்லை என டாக்டர் ராதாகிருஷ்ணன் அறிவிப்பு.

ஏப்ரல் 11. இந்திய நடனக் கலைஞர் கோபிகிருஷ்ண நாட்டியத்தில் ஓர் உலக சாதனையை நிறுவினார். தொடர்ந்து 9 மணி 12 நிமிட நேரம் நடனமாடினார்.

ஏப்ரல் 14- சென்னை அரசாங்கத்துக்கு 'தமிழக அரசு' எ நாமம் சூட்டப்பட்டது.

ஏப்ரல் 15- புதுடில்லியில் பொலிசார் ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும்.

ஏப்ரல் 16- கானவில் இராணுவப் புரட்சி நசுக்கப்பட்டது.

ஏப்ரல் 17- சந்திரனில் துளை போடும் முயற்சியில், அமெரிக்கா புதிய செயற்கைக் கிரகத்தை விண்வெளிக்கு அனுப்பியது.

ஏப்ரல் 18- டெஹ்ரானில் மின்னல் தாக்கி விமானம் வெடித்ததால் 60 பேர் மாண்டனர்.

முன்னாள் மேற்கு ஜெர்மன் அதிபர் கொன்ராட் அடினோர் காலமானர்.

ஏப்ரல் 20- அமெரிக்க விண்வெளிக்கலம் 'சர்வேயர்-3' சந்திரனில் மெதுவாக இறங்கியது.

ஏப்ரல் 21- சந்திரனில் அது துளை போட்டது.

ஏப்ரல் 22- பீஹாரில் பட்டினியால் மாண்டவர் 157 பேர் என முதல்மந்திரி திரு. மஹாமாய சின்ஹா அறிவிப்பு.

கிரீசில் இராணுவ அரசாங்கம்.

ஏப்ரல் 23- விண்வெளிக்கல விபத்தில், ரஷ்ய விண்வெளி வீரர் விலாடிமிர் குமரோவ். காலமானர்.

ஏப்ரல் 24- பம்பாய் வடகிழக்குத் தொகுதியில் திரு. கிருஷ்ணமேனனுக்கு இரண்டாவது முறையாகத் தோல்வி.

### மே

மே 2- கிழக்குப் பாகிஸ்தான் புயலில் 25 பேர் மரணம்

மே 6 - இந்திய உப ராஷ்டிரபதியாகத் திரு. வி. வி கிரி தெரிவு செய்யப்பட்டார்.

மே 7 - சீனவில் படகு விபத்தில் 200 பேர் மரணம்

மே 9 - இந்தியாவின் ராஷ்டிரபதியாக டாக்டர் சாகீர் ஹுசெயின் தெரிவு செய்யப்பட்டார்.

மே 12 -ஜப்பான் கடலில் அமெரிக்க ரஷ்ய நாசகாரிக் கப்பல்கள் மோதல்.

மே 27 - ஜவகர்லால் நேரு நினைவுதினம் இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

### ஜுன்

ஜுன் 1 - கிழக்கு நைஜீரியா புதிய குடியரசாகப் பிரகடனம்.

ஜுன் 4 - ஸ்பெயினிலும் பிரிட்டனிலும் இரு விமான விபத்துக்கள். 158 பேர் மரணம்.

ஜுன் 5 - இஸ்ரேல்-அரபு நாடுகளிடையே போர்.

ஜுன் 9 - போர் நிறுத்தம்.

ஜுன் 10 - ஐ. அ. கு. அதிபர் நாஸர் பதவி துறப்பு அறிவிப்பு. பின்னர், மக்கள் வேண்டுகோளுக்கிணங்க வாபஸ்.

ஜுன் 13 - சீனவிலிருந்து இரண்டு இந்திய தூதரக அதிகாரிகள் நாடுகடத்தப்பட்டனர்.

ஜுன் 16 - இந்தியாவிலிருந்து இரண்டு சீனத் தூதரக அதிகாரிகள் நாடுகடத்தப்பட்டனர்.

ஜுன் 17 - அமெரிக்காவில் ரஷ்ய-அமெரிக்கத் தலைவர்கள் கொஸிஜின் ஜோன்சன் சந்திப்பு.

ஜுன் 18 - தன [illegible]

வது ஜலவாயுக் குண்டைச் சீன வெடித்தது.

### ஜுலை

ஜுலை 1 - கனடாவின் நூற்றுண்டு நிறைவு விழா

ஜுலை 2 - ஐ. அ. கு. - இஸ்ரேல் சண்டை.

ஜுலை 3 - சண்டை நின்றது.

ஜுலை 4 - சென்னை தீவிபத்தில் 10,000 பேர் வீடிழப்பு. கி. ஜெர்மன் ரயில் விபத்தில் 79 பேர் மரணம்.

ஜுலை 5 - கொங்கோ நாட்டில் உள்நாட்டுப்போர். நைஜீரியாவிலும் உள்நாட்டுப்போர்.

ஜுலை 6 - ஹொங்கொங்-சீன எல்லையில் கலவரம்,

ஜுலை 22 - முன்னுள் கொங்கோப் பிரதமர் திரு. ஷோம்பேயை கின்ஷாஷாவுக்கு அனுப்புமாறு அல்ஜீரிய சுப்ரீமகோர்ட் தீர்ப்பு.

ஜுலை 23 - மே. துருக்கியில பூகம்பம்: நூற்றுக்கணக்கானேர் மாண்டனர்,

இந்திய ஒலிபரப்புச்சேவை 40ஆண்டுகள்பூர்த்தி. தமிழ் நாட்டில் தூத்துக்குடி துறைமுகம்,சேலம் எஃகாலை சம்பந்தமான எழுச்சிநாள்.

ஜுலை 24 - அமெரிக்காவில் இனக் கலவரங்கள்: பலர் மரணம்: ஆயிரக்கணக்கானேர் கைது. கனடாவில் பிரெஞ்சு அதிபர் டிகோல்: கியூபெக்விவகாரம் கனடாப் பயணத்தை அவர் இடையில் முறித்துக்கொண்டார்.

# மனிதனுக்கு மாற்று இருதயம்

### ஆகஸ்ட்

ஆக: 1- அமெரிக்காவில் மீண்டும் இனக்கலவரங்கள்.

ஆக: 2- இந்தோனேசியாவில் இராணுவ உயர் அதிகாரிகள் கைது.

ஆக; 3- கார்டூமில் அரபு வெளியுறவு மந்திரிகள் மாநாடு.

ஆக: 4- ஜாகர்த்தாவில் மாணவர் மீது சீனத்தூதரகத்தினர் சுட்டனர். உலகிலேயே நீளமான நாகார்ஜுன சாகர் அணையைஇந்தியப் பிரதமர் இந்திரா திறந்து வைத்தார்.

ஆக:9 சென்னையில்வாணிஷ் குடித்து 102 பேர் மரணம்.

ஆக:14- சீனஎல்லைக்கருகே அமெரிக்க குண்டு வீச்சு.

ஆக; 19- ரொடீஷியாவில் துருப்புகளும், தேசியவாதிகளும் மோதல், 74 பேர் மரணம்.

ஆக: 22- பீகிங்கில் பிரிட்டிஷ் தூதரகத்துக்குத் தீ வைப்பு லண்டனில், சீனத் தூதரகத்தினர் நடவடிக்கைகள் மீது தடை.

ஆக; 23- பீகாரில்மொழிக் கலவரம், 72பேர் மரணம். கல்கத்தாவில் ஹர்த்தால்.

ஆக: 29- கார்டூமில் அரபு உச்சி மாநாடு.

### செப்டம்பர்

செப்: 7-இந்தியாவில்நூற்றுக் கணக்கான மக்கள் வெள்ளத்திற்குப் பலியானர்கள்.50,000 வீடுகள்சேதம்.

செப்: 17 முன்னுள்ஐக்கிய அரபுக் குடியரசுஉதவிப் பிரதமர் அமீர் அதிக மருந்து [illegible] தொண்டார். இவர் அரசாங்கத்தை

## ஆஸ்திரேலிய பிரதமர் கடலில் மறைந்தார்

ரைக் கவிழ்க்க முயன்றதாக வீட்டுக் காவலில் வைக்கப் பட்டிருந்தார்.

செப்: 18- பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்துக்கு எதிராக லண்டன் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. கல்வி மந்திரி செலவுத்தொகையைக்கட்ட வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

செப்: 25- ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டைக் கொலை செய்வதற்கு மொன்ட்ரீலில் (கனடா) சதிமுயற்சி மேற்கொள்ளப்பட்டது.

### அக்டோபர்

அக்: 8- முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பிரபு காலமானர்.

அக்: 19- சுக்கிரன் கிரகத்தில் தரையிறங்கிய ரஷ்ய விண்வெளிக்கலம் சுக்கிரகிரகத்தின் வளிமண்டலம் பற்றிய தகவல்களைப் பூமிக்கு அனுப்பியது.

### நவம்பர்

நவ: 27- போர்ச்சுகல் வெள்ளத்தில் 250பேர் உயிரிழந்தனர்.

### டிசம்பர்

டிச: 3- கேப்டவுனில் 56 வயதான ஒரு மனிதருக்கு விபத்தில் மரணமான இளம் பெண்ணின் இருதயத்தைப் பொருத்தி ஓர் உயிரைப் பிழைக்க வைத்துள்ள சாதனையை அங்குள்ள டாக்டர்கள் ஆற்றினர்.

டிச: 11- மேற்கு இந்தியாவில் மகாராஷ்டிர மாகாணத்தில்ஏற்பட்டபயங்கரபூகம்பம் ஒன்றில் சுமார் 80பேருக்கு மேல் பலியாகினர்.

டிச: 14- கிரீஸிலுள்ள இராணுவ ஆட்சியாளர், கிரீஸ் மன்னர் கொன்ஸ்டன்டைனின்அதிகாரங்களைப்பறித்துக்கொண்டு ஓர் அரசியல் வாதியின் தலைமையில் மத்திய அரசாங்கமொன்றை உருவாக்கினர்.

டிச: 17- ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்ட் கடலில் நீந்துகையில், அலைகளில் அகப்பட்டு மறைந்தார். இன்றுவரை சடலம் மீட்கப்படவில்லை.

## இலவச பரிசோதனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகரின் இரடாம் வட்டாரத்தில் வாழும் கண்சம்பந்தமான நோய் உடையவர்களை இலவசமாக பரீட்சிப்பதற்கும் ஆலோசனை அளிப்பதற்கும் கண் வைத்திய நிபுணர் ஆனந்தராசன் மூன்வந்துள்ளார், அடுத்தமாதம் 4-ம் திகதி பிற்பகல் குருநகரிலுள்ள தண்ணீர்த் தாங்கியின் அடித்தள அறையில், விரும்புவோர் ஆலோசனை பெற ஒவ்வொரு மாதமும் 4-ம் திகதிகளில் ஏனைய வட்டாரங்களில் இவ்வித இலவசசேவையை மக்கள் பெறலாமென்றும் யாழ் மாநகர சுகாதாரப்பகுதி அறிவித்துள்ளது. [நி]

## வேலைநிறுத்தத்தை முறியடிக்க பொலிஸாருக்கு விசேஷபயிற்சி

கொழும்பு,சனி

தொடர்ந்து நடைபெற்று வரும் வேலைநிறுத்தத்தை எந்த வேலையிலும் முறியடிக்க பொலிஸாருக்கு விசேஷ பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருகின்றன.

திடீரென பொலிஸார் எவ்வாறு நடந்து கொண்டு அவசரவேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்கான ஒத்திகைகள் கொழும்பிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் சென்ற வியாழக்கிழமை காலைமுதல் நடாத்தப்பட்டு வருகின்றது. கொழும்பு பிரதம பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. தளையசிங்கம்இங்குள்ளசகல பொலிஸ் நிலையங்களுக்கும் நேரில் சென்று இந்த அவசரகால ஒத்திகைகளை நடாத்தி வருகிறார்.

இராணுவ தலைமைக்காரியாலயத்தினரும் இந்தஒத்திகைகளைஇராணுவத் தொண்டர்களுக்குநடாத்தி வருகின்னர். காலிபேஸ்கரையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கட்கு விசேஷ பயிற்சி ஒத்திகை அளிக்கப்பட்டுள்ளது. [நநி]

## முதலாவதாக சித்தி

வேலணை, ஞாயிறு

இவ்வருடம் நடந்த தாதியர்களுக்கான இறுதிப் பரீட்சையில் வேலணை வங்களாவடியைச் சேர்ந்த செல்வி குலநேசவதி இராமலிங்கம் வடமாகாணப் பரீட்சார்த்திகளில் முதலாவதாகச் சித்தியடைந்துள்ளார்.

## தரம் உயர்வு

புலோலி. ஞாயிறு

''1968ல் நடைமுறைக்கு வரவிருக்கும் புனரமைப்பு திட்டத்தின் கீழ் இங்குள்ள தமிழ்பாடசாலையான புத்தூர் வித்தியாலயம் தரம் உயர்த்தப்படவுள்ளது.

இதுவரைகாலமும் பட்டதாரிஆசிரியர்கள் நியமிக்கப்படாத இப்பாடசாலையில் இனி உயர்வகுப்புக்கள்வைக்கப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்களும்நியமிக்கப்படுவார்களாதலால் இப்பகுதியிலிருந்து வேறுபாடசாலைக்கு பட்டதாரிகளின் படிப்பை நம்பிச் செல்லும் மாணவர்கள் இங்கு சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பாடசாலைக்கு பட்டதாரிஆசிரியர்கள் இல்லாத குறையால் இப்பகுதியில் வசிக்கும் அநேக பிள்ளைகள் இரண்டுமைல் தூரத்திற்குச் சென்று கல்விகற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதுசம்பந்தமாக இப்பகுதி பெற்றோர் தூதுகோஷ்டியொன்று வித்தியாபதிக்கும், உடுப்பிட்டி எம். பி க்கும் முறையிட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றுடன் முடிந்த 1967-ல் சிலமுக்கிய சம்பவங்கள்

# உணவு உற்பத்தியில் ஒருபடி முன்னேற்றம்
# வீட்டில் இருந்தவர்களை விரட்டியது வெள்ளம்

### ஜனவரி

ஜனவரி 5: இலங்கை வானொலி ஒலிபரப்புசேவை கூட்டுத்தாபனமாக்கப்பட்டது

ஜன. 12: இலங்கையில் நான்காவது பல்கலைக்கழகம் கொழும்பில் நிறுவப்பட வேண்டுமென தேசியக் கல்விச்சபை தீர்மானித்தது.

ஜன. 18. திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த தேயிலையைக் கொழும்புத்துறைமுகத்திலிருந்து ஏற்றுமதிசெய்வதை இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் பகிஷ்கரிக்கத் தொடங்கியது.

ஜன. 19: கிராம மின்சார விநியோகத்திட்டத்துக்கு மக்கள் வங்கி கடனுதவி அளிப்பதுபற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாகியது.

ஜன. 19: உணவுப்பொருள்களை சரியான முறையில் விநியோகம்செய்யத்தவறும் கூட்டுறவுச் சங்கங்கள், சமாஜங்கள் எதையும்அரசாங்க உடைமையாக்கி அவற்றின் பொறுப்பிலுள்ள எந்தப் பொருள்களையும் பறிமுதல் செய்வதற்கு உணவு விவசாய அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

ஜன. 20: நாடுமுழுவதிலுமுள்ள பாடசாலைகளில் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட மாணவர்களின்தேலை அனுபவத்திட்டத்தின்மூலம் அரசாங்கத்துக்கு 3 லட்சம் ரூபா மிச்சம் ஏற்பட்டது.

ஜன. 28 அரசாங்கத்தின் உணவு உற்பத்தி அதிகரிக்கும் திட்டத்தின்கீழ்மேலதிகமாக பதினுன்கு அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டனர்.

### பெப்ரவரி

பெப்ரவரி 7: அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் விற்பனவு சம்பந்தமாக வர்த்தக நிலையங்களிலும் பலநோக்குக் கூட்டுறவு கடைகளிலும் மேற்பார்வை செய்வதற்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

பெப். 8: கொழும்பில் சில வர்த்தகர்கள் பதுக்கிவைத்திருந்த 5 கோடி ரூபாமதிப்புள்ள உணவுப்பொருள்கள் வெளிக்கொணரப்பட்டன.

பெப். 10: பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவுவதற்காக சுவீப் ஒன்றை நடத்த தேசிய கல்விச்சபை தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா யோசனை தெரிவித்தார்.

பெப். 20: பல்கலைக்கழக படிப்புக்கு 1971-ம் வருடத்திலிருந்து ஆங்கிலம் கட்டாயம் சித்திபெறவேண்டும் என தேசிய கல்விச்சபை சிபார்சு செய்தது.

ஃ ஃ ஃ

செனட்டர் மாணிக்கம் தமிழரசுக்கட்சியின்பாராளுமன்றக்குழு, மத்திய குழு, பொதுச்சபை ஆகியவற்றிலிருந்து ராஜினமாச்செய்தார்.

பெப். 21. வவனியாவில் அரை ஏக்கருக்குக் கூடுதலாக உப உணவுப்பொருட்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு தெற்கு தமிழ்பிரிவுக் காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம் சுமார் 1000 ரூபாவுக்குமேல் பரிசுகள் வழங்கத்தீர்மானித்தார்.

### மார்ச்

மார்ச் 7: பதினுன்கு வயதுக்குட்பட்ட சிறுவர்களை அல்லது சிறுமிகளை வேலைக்கமர்த்துவது குற்றமாக்கருதப்படவேண்டுமென்றும் இவ்வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு கட்டாயக்கல்வி வசதியளிக்கப்படவேண்டுமென்றும் குழந்தைகள் பாதுகாப்பு பராமரிப்புத்தெரிவுக்கமிட்டி சிபார்சு செய்தது.

மார்ச் 15: தமிழ்மொழி சட்டவிதிகளை அமுல்நடத்தவும் தமிழில் மொழிபெயர்க்கப்படும் வேலைகள் சரியாக நடைபெறவும் உத்தியோக மொழி இலாகாவில் தமிழ் உதவிஆணையாளர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் சம்மதித்தது.

### ஏப்ரல்

ஏப். 8: ஐ நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறையில் பொலிசாருக்கும் மக்கள் கூட்டமொன்றுக்குமிடையில் நடைபெற்ற பயங்கரத் துப்பாக்கிமோதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஏப். 19: 20, சதிவழக்கு எதிரிகளுடன் ஞானசீக தேரோ, உடுகம ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டன.

### மே

மே 9: தென்னிலங்கையில்பெருவெள்ளம்ஏற்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுவாசல்களை இழந்து அனுதைகளாகின.

மே 20: கொழும்பு மகளிர் கல்லூரியில் பரீட்சார்த்தமாக உயர் வகுப்புகளில் ஆரம்பிக்கப்பட்ட மும்மொழித்திட்டம் வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்து

### ஜூன்

ஜூன் 17: யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 100 மாணவர்கள் யாழ்ப்பாணம் இரத்த சேமிப்பு வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

ஜூன் 21: மகாவலி கங்கையைத் திருப்புவதற்கான திட்டத்தை அமுல்செய்வது பற்றி ஆராய்வதற்குப் பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்றை காணி நீர்ப்பாசன அமைச்சர் நியமித்தார்.

ஜூன் 23: யாழ்ப்பாணத்தின் வடபகுதியிலுள்ள செம்பியன்பற்று என்னுமிடத்தில் நிலத்தின் அடிப்பகுதியில் பெற்றோல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

### ஜூலை

ஜூலை 24: செனட்டர் எம். மாணிக்கம் தமது செனட்டர் பதவியை ராஜினுமா செய்தார்.

### ஆகஸ்ட்

ஆக. 1: இலங்கையில் தொழிற் சங்க இயக்கத்தை முதன் முதலில் ஆரம்பித்தவரும் வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென முதன் முதலில் குரல் எழுப்பியவர்களில் முன்னணியில் நின்றவருமான திரு. ஏ. ஈ. குணசிங்கா காலமானுர்.

### செப்டம்பர்

செப். 2: வவனியாமாவட்டத்துக்கு ஒரு தொகுதிக்கு நிதி ஆண்டில் ஒதுக்கப்படும் ஆகக்கூடுதலான தொகையாக ரூ. 5 லட்சம் சுகாதார அமைச்சரால் ஒதுக்கப்பட்டது.

செப்டம்பர் [illegible]: போதனா மொழிப் பிரச்னையில் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது. தமிழ் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியே போதனுமொழியாக இருக்கவும் முஸ்லிம் பிள்ளைகளின் போதனுமொழி பெற்றோரின் விருப்பத்துக்கு விடுவதற்கும் இந்த உடன்பாடு வழி செய்தது.

செப். 18: பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தார்.

செப். 21: சபாநாயகர் சேர் அல்பேட் பீரிஸ் காலமானுர்.

### அக்டோபர்

அக். 3: யாழ்பாண விவசாய அபிவிருத்திக்கு ரூ. 6 கோடி 39 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அக். 22: திரு. ரி. நீதிராசா புதிய தமிழ் செனட்டராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### நவம்பர்

நவம்பர் 22: இலங்கையின் நாணயமதிப்பு 20 சதவிகிதம் குறைக்கப்பட்டது.

### டிசம்பர்

டிச. 5: யாழ்ப்பாணம் பொதுச்சந்தைக்கான அடிக்கல் நாட்டும் பொருட்டு பிரதமர் டட்லி சேனநாயகா யாழ்ப்பாணத்துக்கு முதல் முறையாக உத்தியோக பூர்வமாக விஜயம் செய்தார்.

டிச. 6: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருமழை பெய்ததால் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு பலத்த சேதம் ஏற்பட்டது. பலர் வீடுவாசல்களை இழந்தனர். ரயில், பஸ் போக்குவரத்து சேவைகள் துண்டிக்கப்பட்டன.

டிச. 20: கொழும்பிலுள்ள பல வர்த்தக நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

---

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

சென்னையில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்:

### மியூஸிக் அக்கடமி

1-1-68 திங்கட்கிழமை

மாலை 5-30 மணி
ஸ்ரீமதி கமலா—"நௌகா சரித்திரம்"

இரவு 8-30 மணி
எ. கே. சி. நடராசன்—கிளாரினெட்

### தமிழிசைச் சங்கம்

மாலை 4 மணி
மதுரை கிருஷ்னன்—பாட்டு, கண்டதேவி அழகிரிச்சாமி—பிடில், மதுரை கிருஷ்ண ஐயங்கார் — மிருதங்கம், கும்பகோணம் ராஜப்பையர்—கடம்.

மாலை 6 மணி
குமாரி வையந்திமாலா பரதநாட்டியம்,

இரவு 9-30 மணி
ஷேக் சின்ன மௌலானு—நாதஸ்வரம், திருச்சேறை முத்துக்குமாரசாமி—தவில்.

இந்நிகழ்ச்சிகள் சென்னை மியூஸிக் அக்கடமி மண்டபத்திலும் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ. நி.)

## பஸ் நிலையத்தில் பொழுதுபோக்கு

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் ஒரு பஸ்ஸுக்காக இரண்டு மூன்று மணித்தியாலங்கள் காத்துக்கொண்டு நிற்கவேண்டியது இப்போது சர்வசாதாரணமாகிவிட்டபடியால் இந்த இடைநேரப்பொழுதை கியூவில் நின்றபடி கழிக்கப்பலா பலவிதமுறைகளைக் கையாளுகிறர்கள். இவற்றில் ஒன்று ட்ருண்சிஸ்டரை முடுக்கிவிடுவது. இவ்விதம் ட்ருண்சிஸ்டரை இப்போது பலர் கொண்டுவரத் தொடங்கியுள்ளதால் பஸ்நிலையம் சில வேளைகளில் தியேட்டர் போலவும் மாறுகிறது.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 1-1-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 புதுவருடச் செய்தி, 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு6-15 வீணை, 6-45 பாவளம், 7 00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர்கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-25 உரைச்சித்திரம்—தேசிய வீரர் தினம், 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்த இசை, 10-30 புனித குர்-ஆன் ஓதல்.

## இடமாற்றம்

சாவகச்சேரி, ஞாயிறு
மட்டக்களப்பு கச்சேரியில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. ச. கதிர்காமநாதன் அடுத்தவருடம் ஜனவரி முதல் நீர்கொழும்புக் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி பரராசசேகரம் மட்டக்களப்பு ஜேமன் கத்தோலிக்க பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

சங்கானை' ஞாயிறு
வட்டுக்கோட்டை கிழக்கு கிராமசேவகர் திரு, செல்லையா தேவராசா மானிப்பாய்க்கும் மானிப்பாய் கிராமசேவகர் திரு சு. கந்தசாமி வட்டுக் கிழக்கிற்கு அடுத்த வருடம் ஜனவரி முதல் மாற்றமாகியுள்ளனர்.

ஃ ஃ

ஊர்காவற்றுறை, ஞாயிறு
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றிய திரு. கே. சோமசுந்தரம் அடுத்தமாதம் அவிசாவலை மவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைபொலிஸ் நீதிமன்றத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. நல்லலிங்கம் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தொலுக்கு/முதலியாராகக் கடமையாற்றிய திரு. வேலாயுதபிள்ளை சிலாபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஃ ஃ

பண்டத்தரிப்பு ஞாயிறு
இளவாலை திருக்குடும்ப பாடசாலை தலைமை ஆசிரியை சங். சிஸ்ரர் கொலேற் இடமாற்றம் செய்யப்பட்டதையிட்டு பாடசாலை மாணவிகளாலும் பாடசாலை ஆசிரியைகளாலும் பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது. ஆசிரியையின் சேவைகளைப் பாராட்டி பலர் பேசினர். மாணவிகளின் பாராட்டுப் பாடல்களும் இடம் பெற்றன.

எல்லோர்க்கும் எமது அன்பு கலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ராதா மணிமார்க்
சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா

# நிபந்தனையின்றி குண்டுவீச்சை நிறுத்தினால் சமாதானம் பேச வடவியட்னாம் தயார்

## வெளியுறவு மந்திரி கூறியதாக பிரெஞ்சு செய்தித்தாபனம் அறிவிப்பு

ஹனோய், டிச. 31

**வடவியட்னாம் மீது குண்டுவீசுவதை அமெரிக்கா நிறுத்தினால், வியட்னாம் சமாதானம் பற்றி அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வடவியட்னாம் ஒப்புக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.**

**வடவியட்னாம் மீதானகுண்டு வீச்சை, எவ்வித நிபந்தனையுமின்றி அமெரிக்கா நிறுத்தினால், வியட்னாம் சம்பந்தமான சமாதானப் பேச்சுவார்த்தைகளை அமெரிக்காவுடன் நடத்த ஒப்புக்கொண்டுள்ளதாக வடவியட்னாம், முறைப்படி திட்டவட்டமாக அறிவித்துள்ளதாக ஹனோயிலுள்ள பிரெஞ்சு செய்தித்தாபனமொன்று தகவல் அனுப்பியுள்ளது.**

நேற்று, ஹனோயில் வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில், வடவியட்னாம் வெளியுறவு மந்திரி திரு. இங்குவான் யூதிரின் மேற்கண்டவாறு கூறியதாக அச்செய்தித்தாபனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, வடவியட்னாம்மீதான குண்டு வீச்சை நிரந்தரமாக நிறுத்துவது பற்றி அவர் தமது பேச்சில் ஒன்றும் குறிப்பிடவில்லை என்றும் அச்செய்தித்தாபனம் மேலும் கூறியது.

ஆனால், இதுவரை உத்தியோகபூர்வமான முறையில் பேச்சு வார்த்தைகளுக்கான இணக்கம் பற்றி வடவியட்னாம் அமெரிக்காவை அணுகியுள்ளதாகத் தெரியவில்லை.

வடவியடனாமின் இணக்கச் செய்தி பற்றி வாஷிங்டனிலும் எவ்வித அறிவிப்பும் செய்யப்படவில்லை.

### ஹொசிமின் செய்தி

வியட்னாம் போரை எதிர்க்கும் அமெரிக்கர்களுக்கு, வடவியட்னாம் ஜனாதிபதி திரு. ஹோசிமின், புதுவருட வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளார்.

வயவியட்னாம் போரை உறுதியுடன் தொடர்ந்து நடத்துமென்றும், இறுதி வெற்றி வடவியட்னாமியமக்களுக்கே என்றும் திரு. ஹோசிமின் அந்த வாழ்த்துச்செய்தியில் கூறியுள்ளார் வெளிநாட்டிலுள்ளவர்களின் உதவியுடன் தமது போராட்டத்தை வெற்றியுடன் நடத்த முடியுமெனத் தாம் நம்புவதாகக் கூறிய ஜனாதிபதி, வியட்னாம் போரை எதிர்க்கும் அமெரிக்க மக்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டில் வியட்னாமில் கடும் சண்டை நடக்கலாம் என வடவியட்னாமிய வட்டாரங்கள் ஹேஷ்யம் தெரிவித்துள்ளன.

### போர் ஓய்வு நீடிப்பு

இதற்கிடையில, கிறிஸ்மஸ், புத்தாண்டு இவற்றை ஒட்டிய 3 நாள் போர் ஓய்வைத் தெற்கு வியட்னாமியரும், அமெரிக்கரும் மேலும் 12 மணி நேரம் நீடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாப்பரசர் போல் புத்தாண்டு தினத்தைச் சமாதான நாளாக உலகம் பூராவும் அனுஷ்டிக்கவேண்டும் என்று விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இவ்வாறு போர் ஓய்வுக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

### 175 அமெரிக்கர் கொல்லப்பட்டனர்

ஆனாலும், கடந்த இரண்டு தினங்களில் தென்வியட்னாமின் அதி வடக்குப் பிராந்தியங்களில் கடும் சண்டை நிகழ்ந்துள்ளது அண்மையில் நடைபெற்ற மிகக் கடுமையான இரண்டு மோதல்களில், வடவியட்னாமிய துருப்புகள், 175 அமெரிக்கரைக் கொன்றுள்ளன.


நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி நடித்த
முகராசி

REGAL JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
Mark Damon & Scilla Gabel
in
M. G. M's
The Son of Cleopatra
[in color cinemascope]

2-வது வெற்றிவாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பதுளை]



சுந்தரராஜன்
ஏ.வி.எம் ராஜன்
முத்துராமன்



ஜெயலலிதா
நாகேஷ்
மற்றும்
பலர்
நடிக்கும்
மேஜர் சந்திரகாந்த்


---

### வட்டார விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

இதுவரைகாலமும் 10வட்டாரங்களாகவிருந்தபுத்தூர் கிராமசபை 17 வட்டாரங்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டாரப் பிரிவினால் சிறுபான்மைத்தமிழர் தமது பிரதிநிதிகளைக் கணிசமான அளவுக்குத் தெரிய வாய்ப்பேற்பட்டுள்ளதாம். (நி)


MANOHARA
JAFFNA
1 st to 3 rd
Daily 4 Shows
Jerry Lewis
in
DISORDERLY ORDERLY
Also Showing
1967 F. A. CUP FINAL


## இந்தியாவில் வளர்ந்து வரும் பிரிவினைச்சக்திக்கு எதிர்ப்பு

### எமது முதலாய கடமை என்கிறார் பி. சோ. தலைவர்

கான்பூர், டிசெ. 31

கான்பூரில் நடைபெற்ற இந்திய பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய கட்சியின் தலைவரான திரு. என். ஜி கோரே நாட்டில் அண்மையில் அதிக அளவில் தோன்றியுள்ள பிரிவினைச் சக்திகளை எதிர்க்க வேண்டியதே கட்சியின் முதலாவதும் முக்கியமானதுமான கடமை என்று கூறியுள்ளார்.

வளர்ந்துவரும் பிரிவினைச் சக்திகளை இப்படியே விட்டு வைத்தால், வெகுவிரைவில் இரண்டொரு ராஜ்யங்கள், மத்திய அரசிலிருந்து விலகமுற்படலாமென்று அவர் எச்சரித்தார்.

நாட்டில் நடைபெறும் பலாத்காரச் செயல்களும், வன்முறைச் சம்பவங்களும் கம்யூனிஸ்டுகளுக்கே நன்மை பயக்கும் என்று திரு. கோரே கூறினார்.

மொழியின் பெயரில் வெறித்தன்மை நாட்டில் தாண்டவமாடுவதை அவர் கண்டித்தார்.

நாட்டுக்கு நல்ல தலைமை மையளிக்க கூட்டு அணிகள் கட்சிகளிடையே தோன்ற வேண்டும்என்று ஆலோசனை கூறிய திரு. கொரே, அக்கட்சிகள் எல்லாமே ஜனநாயக கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதில் ஐக்கியமுடையவர்களாக இருக்க வேண்டியது அவசியமென்றும் வலியுறுத்தினார்.

### ரப்பர் இறக்குமதி இந்தியா தடை

புதுடில்லி, டிசெ. 31

ரப்பர் இறக்குமதியை இந்தியா தற்காலிகமாகத் தடை செய்யமுடிவு செய்திருப்பதாக இந்திய உதவி வர்த்தக மந்திரி அறிவித்துள்ளார்.

உள்ளூர் ரப்பரின் விலைகள் சீராக நிலைப்படுத்தும்வரை வெளியிலிருந்து ரப்பரை இறக்குமதி செய்வதை அரசாங்கம் தடை செய்யவிருப்பதாக அவர் கூறினார்.

உள்ளூர் ரபபரின் விலைகள் சீராகாவிடின் ரப்பரை வாங்க அரசாங்கமே சந்தையில் இறங்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். ——

### மாதர் எதிர்ப்பு

பம்பாய், டிசெ 31

அகில இந்திய மாதர் மகாநாடு நேற்றுடன் தனது இரண்டுநாள் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டது.

இந்தியாவில் உணவு மண்டல முறை ஒழிக்கப்படவேண்டுமென்றும் அதற்குப் பதிலாக ஒரே சீரான உணவு விநியோகத் திட்டம் இடம்பெற வேண்டுமென்றும் கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### உள்நாட்டுச் சண்டை

ஹொங்கொங், டிச. 31

சீனாவில் மீண்டும் உள்நாட்டுக் கலகங்கள் தேன்றியுள்ளன.

கான்டன் ஹூனன் மற்றும் பல மாகாணங்களில் மக்களுக்கும் துருப்புகளுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. சில இடங்களில் கடும் சண்டை நடந்ததாக செய்திகள் கூறுகின்றன.

### திருமலையில் திருவாசகவிழா

திருகோணமலை, ஞாயிறு

திருகோணமலை சிவயோக சமாஜத்தினர் திருவாசக விழாவினை சிவயோக சமாஜ யோகாச்சிரமத்தில் இம்மாதம் 5-ந்திகதி சிவயோக சமாஜத் தலைவர் டாக்டர் க. அ. சித்திரவேலு தலைமையில் கொண்டாடுகிறார்கள். திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர். சி. சிவானந்தன் திரு. த. சிவஞானம், வித்துவான் பொன். முத்துக்குமாரன் திருமதி மங்களேஸ்வரி சோமகேசன் ஆகியோர் விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.


### விற்பனைக்கு

பொங்கோஸ்

நல்ல நிலையிலுள்ள பொங்கோஸ் (தாளவாத்தியக் கருவி) சகாய விற்பனைக்கு உண்டு சோ. சபானந்தன், ['சித்ரா மெல்லிசைக்குழு'] சந்தை வீதி, உடுப்பிட்டி. 2030

### வாடகைக்கு

வீடு

எல்லா வசதிகளுடனும் அமைந்த வீடு வாடகைக்குண்டு. வேம்படி, சென்றல் பாடசாலைகள், ஆஸ்பத்திரி, சந்தை எல்லாவற்றிற்கும் அருகாமையில். விபரத்திற்கு நேரில் வரவும். 6/1, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 2600


### மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் கந்தர் மடம் மணல்தறை லேன் பிரபல வர்த்தகர் பண்டாரம் தம்பிப்பிள்ளை சிவபதமடைந்துவிட்டார். இவர் நடராசா கணக்கப்பிள்ளை, கணேசன் சிமெந்துத் தொழிற்சாலை, சின்னராசா சண்முகநாதன் கமலா ஸ்ரோர்ஸ் சிலாபம் ஆகியோரின் தந்தையாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-1-68 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். 2031


### தவறிவிட்டது

நா. நடராசா, ச மயில்வாகனம் ஆகியோரது லைசென்சும், 24ஸ்ரீ 8058 உழவு மெசின், ரெயிலர், ராக்ஸ் இன்சூரன்ஸ், ருன்சுவர் புஸ்தகங்களும், உடுப்புக்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்திலோ, அல்லது நா. நடராசா, கறுக்காய்தீவு, பூநகரி என்ற விலாசத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2599


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரிமாதம் 1 ந்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org